விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 050 வள்ளுவர் ஆண்டு 2055 தை 24 புதன்கிழமை (07.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## பாரதப் பிரதமரை சந்திக்கவுள்ள தமிழ்க் கட்சித் தலைவர்கள்

கொழும்பு ஊடகம் தகவல் 14 பக்கம் பார்க்க

## சாந்தன் நாடு திரும்புவதற்கு எந்தவித தடையும் இல்லை

வெளிவிவகார அமைச்சர் 7 பக்கம் பார்க்க

## யுக்திய சுற்றிவளைப்பு; 50 நாட்கள் பூர்த்தி

- 56, 541 சந்தேகநபர்கள் கைது
- 142 கிலோ ஹெரோயின், 208 கிலோ ஐஸ், 974 கிலோ ஹொக்கெய்ன் மீட்பு

(கொழும்பு)

யுக்திய சுற்றிவளைப்பு ஆரம்பமாகி நேற்றுடன் 50 நாட்கள் பூர்த்தியாகியுள்ளன.

குறித்த காலப்பகுதிக்குள் 56,541 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ள 15

# 2024 பொதுத் தேர்தல் நடத்தத் தீர்மானம்

## அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல



(கொழும்பு)

2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## அவிசாவளையில் திடீர் வெடிப்பு
### ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அவிசாவளை மாடோல பிரதேசத்தில் இரும்பு பொருட்களை சேகரிக்கும் இடத்தில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது. 15

## சில காலத்துக்கு வாகனங்கள் இறக்குமதி இல்லை

(கொழும்பு)

சில காலத்திற்கு மோட்டார் வாகனங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்ய முடியாது என நான் நம்புகின்றேன் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரி 15

## இந்திய முதலீடுகளை ஜே.வி.பியால் இழந்தோம்



### நாமல் எம்.பி விசனம்

(கொழும்பு)

இலங்கைக்கான கடந்த காலங்களில் பல இந்திய முதலீடுகளையும், முதலீட்டாளர்களையும் இழந்தமைக்கு ஜே.வி.பியே 15

## தென்னைகளைத் தாக்கும் வெள்ளை ஈ யாழ்.மாவட்டத்தில் மீண்டும் பரவுகிறது

### எச்சரிக்கிறார் பிராந்திய முகாமையாளர் வைகுந்தன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீண்டும் வெள்ளை ஈ தொற்று தென்னைகளைத் தாக்கி வருவதாக தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் எச்சரித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளை ஈ தொற்று தென்னைகளைக் கடுமையாகத் தாக்கி வருவதாகவும் இதன் 15

## இணைய சட்டம் தொடர்பான குற்றச்சாட்டு அடிப்படையற்றது

### சபாநாயகர் அலுவலகம் அறிவிப்பு

(கொழும்பு)

இணையவழி பாதுகாப்பு சட்டம், உயர்நீதிமன்ற பரிந்துரைகளை புறக்கணித்து நிறைவேற்றப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என சபாநாயகர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அந்த அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கை 15

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்?

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களால் பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் நேற்று மட்டுப்படுத் 16

## அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்தார்

### கெஹலிய ரம்புக்வெல



(கொழும்பு)

சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தனது அமைச்சுப் பதவியை நேற்று இராஜினாமாச் செய்துள்ளதாக 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா பயிர் செய்ய அனுமதி வழங்கவில்லை

## டயானா கூறியது உண்மையில்லை அமைச்சர் பந்துல குணவர்தன

(கொழும்பு)

இலங்கையில் கஞ்சா பயிர் செய்வதற்கும் அதனை ஏற்றுமதி செய்வதற்கும் அமைச்சரவை எந்த அனுமதியினையும் வழங்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பாக எந்த அமைச்சரவையில் முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கையில் கஞ்சா பயிர்செய்கை மற்றும் ஏற்றுமதி தொடர்பாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுற்றுலாத் துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக நேற்றைய அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன டயனா கமகே அமைச்சரவை அமைச்சர் அல்ல எனவும் அவர் கூறிய கருத்திற்கு தாம் பொறுப்பல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்தி

# பொருளாதார வீழ்ச்சி ஏற்படாத நிலையை உருவாக்குவோம் - அலி சப்ரி

(கொழும்பு)

நாடுகளுக்கிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியடையாத நிலைக்குக் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத் திட்டம் வலுப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, வியட்நாம் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை கைச்சாத்திட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி,

ஸ்திரமான பொருளாதாரத்தை உருவாக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வையின்படி, போட்டித்தன்மை வாய்ந்த புதிய சந்தைகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு இலங்கையின் பொருளாதாரத்திற்கு நேரடியாகப் பங்களிப்புக்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

அதன் வரலாற்று சிறப்புமிக்க முன்னெடுப்பாக, அண்மையில் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால் உலகில் பாரிய அளவில் சந்தை வாய்ப்புகள் உள்ளன. அபிவிருத்தி அடைந்த பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் அந்தப் பாரிய சந்தை வாய்ப்புக்களைச் சிறப்பாகக் கையாள்வதன் மூலம் தங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்தியுள்ளன.

வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் இன்று உலகின் பாரிய சந்தைகளுடன் சுதந்திர பொருளாதார ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் வலுவான பொருளாதாரத்தை அடைந்துள்ளன. இதன் மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்றார்.

(ம-7)

# 50 பேக்கரிகள் மீது வழக்கு தாக்கல்

(கொழும்பு)

நிறை குறைந்த பாணினை விற்பனைசெய்த 50 பேக்கரிகள் மீது வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாணின் நிர்ணயிக்கப்பட்ட எடைக்கான வர்த்தமானி வெளியிடப்பட்டதையடுத்து, நுகர்வோர் விவகார அதிகாரசபை நேற்று முன்தினம் அதற்கான சோதனைகளை ஆரம்பித்தது.

பேக்கரிகள் மற்றும் கடைகளில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, நிர்ணயிக்கப்பட்ட எடை மற்றும் விலையை காட்சிப்படுத்தாத சுமார் 50 பேக்கரிகள் மீது சோதனை நடத்தப்பட்டு, அந்த நிறுவனங்கள் மீது எதிர்காலத்தில் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# சட்டவிரோத மீன்பிடி

## வடமராட்சியில் ஒருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் ஒளி பாய்ச்சி கடலில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடலில் சுற்றுக் காவலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வெற்றிலைக்கேணி கடற்படையினர் கட்டைக்காட்டு கடற்பரப்பில் ஒளிபாய்ச்சி மீன்பிடித்த அதே பகுதியை சேர்ந்த 23வயதுடைய நபர் ஒருவர் உடைமைகளுடன் கைது செய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேக நபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7,60)


**லங்கா மஹறால்(PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1790/=
ஜேர்மனி - 1690/=
கனடா - 2150/=
சுவிஸ் - 1990/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (18918)


இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்துதரப்படும்.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு.
**077 8393 974**


# மரண அறிவித்தல்



# சித்தர் வேலாயுதபிள்ளை

## ( வேலாயுதம் )

பழைய கமம் முரசுமோட்டை கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சித்தர் வேலாயுதபிள்ளை (வேலாயுதம்) அவர்கள் நேற்று (06.02.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புக் கனவரும் காலஞ்சென்றவர்களான சித்தர் - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும் முருகர் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற சஞ்சயன் மற்றும் சஞ்சீவன் (பெல்ஜியம் ), றோஜிதா (லண்டன்), சதுர்ஷன் (சதுக்குட்டி - முரசுமோட்டை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிந்துஜா ( பெல்ஜியம்), நிறஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதிரன், ஆரணி, ஆருசன் ஆகியோரின் அன்புப் பேரனும் தவமணி (முரசுமோட்டை), சிதம்பரநாதன் (முரசுமோட்டை), செல்லம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை - முரசுமோட்டை), செல்வராசா (முரசுமோட்டை), சிவபாக்கியம் (முரசுமோட்டை), யோகராசா (நோர்வே), வசந்தாநிதி (முரசுமோட்டை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பவதி (முரசுமோட்டை), செல்வராசா ( முரசுமோட்டை), தனலட்சுமி (முரசுமோட்டை), மகேந்திராசா ( முரசுமோட்டை), ரவிச்சந்திராசா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.02.2024) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணிக்கு பூதவுடல் முரசுமோட்டை ஐயன்கோவிலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பழையகமம்,
முரசுமோட்டை. (C-8297)

தகவல்:
குடும்பத்தினர்

உ
சிவமயம்

" நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்கும் "



புளியம்பொக்கணை

# நாகதம்பிரான் ஆலய பொங்கல் தொடர்பான அறிவித்தல் 2024

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா எதிர்வரும் 24.03.2024 ஆந் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் **எதிர்வரும் 09.02.2024ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில்** கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. குறித்த கலந்துரையாடலில் துறைசார்ந்த திணைக்களத் தலைவர்கள், உபயகாரர்கள், உற்சவ கால தொண்டர்கள் என சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம். (C-8296)

**குறிப்பு–** குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று 07.02.2024ஆந் திகதி நடைபெறவிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் குறித்த 09.02.2024 திகதிக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


தகவல்
ஆலய பரிபாலன சபை
கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 ஆவது அகவைதனில்
# கண்ணீர் நினைவலைகள்

## அமரர். சண்முகநாதன் சந்துதன்


**மண்ணில்: 07.02.2000** **விண்ணில்: 08.09.2009**





### அன்பின் திருவுருவே சந்து அண்ணா!

இன்று உங்கள் 24 ஆவது பிறந்தநாள். நீங்கள் இப்புவியில் வாழ்ந்த
ஒன்பது ஆண்டுகளும் இன்பமானவை.
அந்த நாட்கள் வீட்டிலே களியாட்டம் என அம்மா கூறிக் கேட்டோம்.
இன்று நீங்களும் இல்லை. அப்பா, அம்மாவும் எம்முடன் இல்லை.
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்த பின் இந்த நாளை மிகவும் வேதனையாக
அம்மா புனிதநாளாக கொண்டாடுவார். அது போல
நாங்களும் இன்றைய நாளில் உங்கள் புனித இல்லம் சென்று
அஞ்சலி செலுத்துகின்றோம்.
நீங்கள் மூவரும் மீண்டும் எம்முடன் சேர மாட்டீர்களா?
என நாமும் நம் உறவுகளும் ஏங்கித் தவிக்கின்றோம்.
அண்ணா நீங்கள் எங்களுடன் வாழவில்லை என்றாலும்
நீங்கள் பேசிய வார்த்தைகள், உங்கள் அன்பு,
அழகிய திருமுகம் எல்லாம் என்றும் எம்மைவிட்டு நீங்காது
மீண்டும் பிறப்பு உண்டெனில் உங்களுடன் வாழ வேண்டும் என
வேண்டி நிற்கின்றோம். வருவீர்கள் என எதிர்பார்த்து.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி!!!



"சண்முகநாதம்",
4ஆம் கட்டை, கட்டைப்பாலி லேன்,
ஆனைக்கோட்டை.

அன்புச் சகோதரர்கள்
தேவசந்துதன், தேவசாத்வீகன்
மற்றும் உறவுகள்.

(18904)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ஆப்கானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றது இலங்கை




ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட்டுகளால் வெற்றிபெற்று டெஸ்ட் தொடரையும் கைப்பற்றியுள்ளது.

கடந்த 2ஆம் திகதி கொழும்பு- எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 198 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அவ் அணி சார்பாக ரஹ்மத் ஷா அதிகபட்சமாக 91 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக விஸ்வ பெர்னாண்டோ 4 விக்கெட்டுகளை சாய்த்தார்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் விளையாடிய இலங்கை அணி, 439 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இலங்கை அணி சார்பாக மத்தியூஸ் 141 ஓட்டங்களையும் சந்திமால் 107 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் நவீத் சத்ரான் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து, 241 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆப்கான் அணி 296 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

ஆப்கான் அணி சார்பாக ஆரம்ப துடுப்பாட்ட வீரரான இப்ராஹிம் சத்ரான் 114 ஓட்டங்களை பெற பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதனை தொடந்து 56 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி எவ்வித விக்கெட் இழப்பும் இன்றி வெற்றி இலக்கை கடந்தது. (நி-5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3033

### கவின்




### குமரன்




### தமயந்தி




### சாருஷா




### பிரபு




### தர்சி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கும் சாரதி அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நவம்பர் 14.2022 அன்று அமைச்சரவை தீர்மானத்தின்படி கம்பஹா மாவ ட்டத்தை மையமாகக் கொண்டு முன்னோடித் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இதன்படி. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ( நி-5-6)

# அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி

(கொழும்பு)

இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் தலைநகர் பேர்த்தில் இம்மாதம் 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் குறித்த மாநாடு இடம்பெறவுள்ளது.

குறித்த மாநாட்டில் ஜனாதிபதி முக்கிய உரையாற்றுவார் என ஜனாதிபதி அலுவலக சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் டினூக் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி தனது விஜயத்தின் போது அவுஸ்ரேலிய பிரதமரையும் அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சரையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)


உ.
சிவமயம் ஓம் நமசிவாய

## நம் சந்ததியின் நலம் கருதியும் பிதிர்தோஷம் நீங்கவும் தை அமாவாசை விரதம் அனுஷ்டித்து அபிராமி அந்தாதியையும் திருமுறைகளையும் இருதய ஆகரத்தில் தோன்றிய அம்மை, அப்பனை பாடுவோமாக

**விழிக்கே அருளுண்டு அபிராமி வல்லிக்கு வேதம் சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ் வழிகிடக்கப்**
**பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ் நரகக்**
**குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே**

**அபிராமி அந்தாதி**

தை அமாவாசை. ஆடி அமாவாசை. புரட்டாதி மாளய அமாவாசை ஆகிய தினங்களில் பிதிர் கடன்களை நம் முன்னோர்கள் ஆத்ம விமோசன வழிபாட்டுடன் பிரார்த்தனை செய்து. நம் சந்ததிகளின் **பிதிர் தோஷங்கள் நீங்கவும் அவர்களின் தீயபழக்கங்கள் நீங்கவும் மாதம் ஒருநாள் அமாவாசையை சைவ ஆசாரமாக இருந்து இறைவனை வழிபட்டு மறைந்த தாய், தந்தை மற்றும் உறவினர்களின் ஆசீர்வாதம் பெற்று நலமாய் வாழ்வோம்.**

தட்சன் சிவனிடம் பெற்ற தவத்தால் தாம் சப்பிரசாபதி உலகம் அமைத்து வேதவதியைத் திருமணம் செய்து 1000 ஆண்பிள்ளைகளையும் இருதடவையும் பெற்று அவர்களால் தனது உலகுக்கு ஓர் பிரயோசனம் இல்லை என மனம் நொந்து பின்னர் 50 பெண் பிள்ளைகளைப் பெற்று 13 பெண்களை நமது மூத்த தந்தையான காசிப முனிவருக்கு திருமணம் செய்து 10 பெண்களை இயமதர்மராஜாவுக்கு மணம் செய்து மிகுதி 27 பெண்களையும் சந்திரனுக்கு தாரைவார்த்து கொடுக்கும் போது பிள்ளைகள் அனைவரையும் ஒரே விதமாக கவனிக்கும்படி கொடுத்தான். சந்திரன் கார்த்திகை. உரோகினியுடன் மட்டும் அன்பு செலுத்தி மற்றைய பெண்களை புறக்கணித்தான். அவர்கள் தங்கள் தந்தையிடம் சென்று முறையிட்டார்கள். தட்சன் உடனே சந்திரனை அழைத்து எனது பெண் பிள்ளைகள் 26 பேரையும் புறக்கணித்ததால் நீ தேய்ந்து மறைந்து போவாய் என சபித்தான்.

தட்சனின் சாபத்திற்கு முன்னர் சந்திரன் தேய்வதில்லை. தற்போது தேய்ந்து போய் பிரம்மனிடம் முறையிட்டு பின் நாராயணரிடமும் முறையிட எல்லோரும் முக்கண் சிவனிடம் போகும்படியும் கருணை நிறைந்தவன் அருள் புரிவார் என அறிவுறுத்தினார்.

**தேய்ந்து உருமாறிய சந்திரன்** கயிலாயம் சென்று நந்தியெம்பெருமாள் அனுமதியுடன் இறைவனை பணிந்து தனக்கு நடந்த சம்பவங்களையும் சொல்லி சபாவிமோசனம் வரம் தரும்படியும் தான் செய்த தவறை மன்னிக்கும்படியும் வணங்கி **திருவடியில் சரணாகினான்.** எம் பெருமான் 27 பெண்களுடன் நிறைவுடன் வாழும்படியும் ஒருநாள் மட்டும் **மறைந்து அத்தினம் தான் தட்சன் சாபத்தால் ஏற்பட்ட அமாவசை ஆகும்.**

**சந்திரனது ஒரு கலையினைக் தமது திருமுடியில் தரித்து எப்போதும் ஒரு கலை உன்னை விட்டு நீங்காது என்று கருணை பாலித்தார்.**

**ஒவ்வொரு சைவ மக்களுக்கும் மாதமாதம் வரும் அமாவாசைகளில் விரதம் இருப்பதுடன் தை அமாவாசை, ஆடி அமாவாசை, புரட்டாதி மாளய அமாவாசை காய்கறி பொருட்களுடன் பச்சை அசிரியுடன் பிதிர்க் கடனாகிய ஓர் நீர் நிலையின் கரையில் தானமும் கொடுத்து பயபக்தியுடன் தாய், தந்தையாரை மனதில் நினைத்து அவர்களது ஆசீர்வாதம் பெற வேண்டும் எனச் சைவசமயம் வலியுறுத்துகிறது**

**"ஓம்நமசிவாய"**

09.02.2024 தை அமாவாசை தினம் அனைத்து தாய். தந்தையரை இழந்தவர்கள் சிவாச்சாரியார் முன் எள்ளுத் **தண்ணீர் பிதிர்க்கடன் வழிபாடு செய்து நமது சந்ததியினருக்கு வழிகாட்டியும் பிதிர்க்கடன் நீக்கியும் தாய், தந்தையரின் ஆசீர்வாதத்துடன் நலமாய் வாழ்வோமாக "ஓம் நமசிவாய."**

எமது முன்னோர்கள் தென்புலத்தில் இருக்கும் தினங்களில் எம் உறவினர் யாவருக்கும் அமுது சந்திரன் மூலமாகத்தான் கிடைப்பது! **அமாவாசை தினத்தில் சந்திரன் தட்சன் சாபத்தால் தனது பிதிர் கடனுக்காக மறையும் போது எமது தாய், தந்தை முன்னோருக்குச் சந்திரனின் அமுது இல்லாததால் அவர்கள் நமது வீட்டு வாசலில் வந்து இருப்பார்கள். நாம் அமாவாசை தினம் நம் முன்னோர்களுக்குச் செய்யும் வழிபாடு அவ்வளவையும் பார்த்து நாம் படைப்பில் வைக்கும் அமுது ஏற்று ஆசீர்வாதம் செய்வார்கள் "ஓம் நமசிவாய."**

இவ்வாறு அமாவாசை வழிபாடும் விரதமும் பிரார்த்தனையும் செய்யாது விட்டால் தென்புலத்தில் இருந்து அந்த ஒரு நாள் மட்டும் வந்த முன்னோர்களது ஆத்மா திட்டும் என புராணங்கள் மூலம் அறியலாம்.

நம் முன்னோர் காட்டிய சைவநெறியை கடைப்பிடித்தும் **பிதிர்தோசம் நீங்கவும் நம் இறந்த முன்னோர் ஆசீர்வாதம் பெறவும் தை அமாவாசை விரதங்களையும் ஆடி அமாவரசை புரட்டாதி மாளய அமாவாசை வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்து நம் பிதிர்தோஷம் நீங்கி நம் சந்ததி நல்ல சைவநெறியில் வாழ இறைவனைப் பிரார்த்திப்போம் "ஓம் நமசிவாய."**

**திருநாவுக்கரசு 5ஆம் திருமுறை 441ஆவது தேவாரம்**

**பித்தன், முத்தன், சித்தன், அத்தன் எனும் தொடர் நான்கு தொடக்க வரியில் உலகில் இருந்து மாறுபட்ட இயல்பு, பாசங்களிலிருந்து விடுபட்ட தூயன் எம்பெருமானை சரண் எனத் திருவடியில் வீழ்ந்த தேய்பிறைச் சந்திரனை தன் சிரசினில் வைத்தவன். ஆன்மாக்களை உய்விப்பவனை நாம் இமைப்பொழுதும் மறவாது வழிபட்டு நால்வர் நம்மூவர் முதலானோர் மெய்யடியார்கள் வாயிலாகப் பாடுவித்து அதனையே பரிசிலாகக் கொண்டருளுகின்ற புகழும்படியாக பாடுவோம். வைசநெறியில் வாழ்வோம். 09.02.2024 வெள்ளி அமாவாசை தினத்தில் பூரணச சந்திரன் தோற்றம் தந்த அபிராமி அந்தாதி பாடுவோம். நம் சந்ததியுடன் நலம் பெறுவோம்.**

**தை அமாவாசை அன்று மோட்ச அர்ச்சனை சிவன் கோவிலில் செய்வோமாக. கோமாதாவிற்கும் அகத்தி இலை கொடுப்போமாக. " ஓம்நமசிவாய"**



க.கு.க.சிவபாலன்,
ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம்,
பாதுகாவலர்.

(சி-8290)


# இராசிபலன்

07.02.2024
தை 24, புதன்கிழமை
துவாதசி முற்பகல் 11.24 மணிவரை
பூராடம் பின்னிரவு 02.59 மணிவரை

சுபநேரம் -5.05-6.35 மணிவரை
இராகுகாலம்-12.35-2.05 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்
ரோகினி.

**வளவன்**



**மேஷம்**
தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**ரிஷபம்**
வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.



**மிதுனம்**
செய்தொழில் மேன்மையுண்டு, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகலாம், தன்னம்பிக்கையுடன் பணி புரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.



**கடகம்**
வழிபாடு சிறப்பினைத் தரும், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.



**சிம்மம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.



**கன்னி**
பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயிர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.



**துலாம்**
ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



**விருச்சிகம்**
செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.



**தனுசு**
மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள், ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.



**மகரம்**
பயணங்களால் பிரபலமானவர்கள் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.



**கும்பம்**
பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் பணவரவால் சந்தோஷமடைவீர்கள்.



**மீனம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், செய்தொழில் மேன்மை உண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.

**வளர்ச்சி கால[illegible] வட்டத்திற்குள் அடங்காது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அபிவிருத்தி தொடர்பில் வவு.இடம்பெற்ற கலந்துரையாடல்

(வவுனியா)

வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில்,வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் வறுமை காரணமாக மாணவர்களின் அடைவுமட்டங்கள் குறைவடைந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ளதோடு, மாணவர்களின் அடைவுமட்டங்களை அதிகரிப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய தேவை குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.



அத்துடன் வன்னி மாவட்டங்களின் கல்வி நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், அதில் ஏற்படுத்தப் பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் கிராமிய இராஜாங்க அமைச்சர் காதர்மஸ்தான், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் காயத்திரி அபேகுணசேகர, பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6)

## நிபந்தனை அடிப்படையில்

# நெடுந்தீவில் கைதான 6 இந்திய மீனவர்கள் விடுதலை

(கரணவாய்)

நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட ஆறு இந்திய மீனவர்களும் நிபந்தனையின் அடிப்படையில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் நேற்று செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 23ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கடற்படையினரால் இரண்டு படகுகளில் மூன்று பேர் வீதம் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். இவ் வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. நீரியல் வள திணைகளத்தினரால் ஆறு மீனவர்களுக்கு எதிராகவும் மும்மூன்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து மூன்று குற்றச்சாட்டுகளுக்கு தலா ஆறு மாத கால சாதாரண சிறைத் தண்டனை வீதம் 18 மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்து அதனை ஐந்து வருடங்களுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜே.கஜநிதிபாலன் ஒத்தி வைத்தார். படகின் உரிமையாளர்களும் படகில் இருந்ததன் காரணமாக இரண்டு படகுகளும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. (நி-5-6-60)



யாழ்.போதனா மருத்துவமனைக்கு கோண்டாவில் இராஜேஸ்வரி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி செல்லத்துரை திருமாறனின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான இன்சுலின் ஊசி மருந்துகள் கடந்த வெள்ளிக்கிழமை மருத்துவமனை பிரதிப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# 423 வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடத்தில் 423 வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ச.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் நிலுவையாக இருந்த வழக்குகள் உட்பட 433 வழக்குகளுக்கு சட்ட நடவடிக்கைகளின் பின்னர் முப்பத்தைந்து லட்சத்து இருபத்து மூவாயிரம் ரூபாய் நீதிமன்றால் அபராதமாக விதிக்கப்பட்டது. பொதுமக்கள் இது தொடர்பான முறைப்பாடுகளை தங்களுக்கு நேரடியாகவோ அல்லது 1977 என்ற இலக்கத்தின் ஊடாகவோ முறைப்பாடுகளை செய்யலாம் என பாவனையாளர் தெரிவித்தார். (நி-5-6-315)

# இறுவட்டு, மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் செல்வபால நர்த்தன விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் மற்றும் இறுவட்டு வெளியீடு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கோண்டாவில் செல்வபால நர்த்தன விநாயகர் ஆலய முன்றலில் ஞான திருக்கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வரும் காட்சி இடம்பெறும் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது நிலையில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு சென்நீக்கிலஸ் அணியை எதிர்த்து பொலிகை ஒற்றுமை அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து சென் பீற்றேஸ் அணியும் மோதவுள்ளன. (நி-5-6-90)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 550 | 500 | 450 | 680 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 150 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1100 | 1000 | 1200 | 1200 |
| தக்காளி | 750 | 750 | 800 | 1000 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 130 | 150 | 150 | 110 |
| கோவா | 600 | 600 | 600 | 600 | 650 |
| கரட் | 800 | 1000 | 1300 | 1400 | 1200 |
| பூசணி | 220 | 240 | 200 | 250 | 220 |
| புடோல் | 250 | 250 | 300 | 300 | 240 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 300 | 240 |
| சின்ன வெங்காயம் | 280 | 350 | 300 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 360 | 380 | 350 | 400 | 360 |
| பாகற்காய் | 600 | 400 | 600 | 600 | 470 |
| வெண்டக்காய் | 500 | 500 | 300 | 600 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 450 | 450 | 600 | 800 | 600 |
| பீற்றூட் | 450 | 500 | 450 | 450 | 500 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 | 1200 | 900 |
| முருங்கைக்காய் | 1800 | 3000 | 2000 | 2000 | 2000 |
| போஞ்சி | 450 | 350 | 450 | 800 | 360 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | 500 | 400 | — |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 100 | 60 |
| தேசிக்காய் | 200 | 300 | 250 | 200 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90 | 80-110 | 80-110 |
| இராசவள்ளி | 450 | 400 | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 300 | 350 | 240 |
| முள்ளங்கி | 150 | 100 | 250 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 80 | 130 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 80 | 200 | 100 |

# ஆள்நடமாட்டம் குறைவான வீதிகளில் அதிகரிக்கும் வழிப்பறி பயணிகள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் - இராச வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை, மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த வழிப்பறி கொள்ளையர்கள் அறுத்துக் கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் , பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை குறித்த வீதி ஆள் நடமாட்டம் குறைந்த வீதியாக காணப்படுவதனால், வழிப்பறி கொள்ளையர்கள் அதனை சாதகமாக்கி வழிப்பறிகளில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்து உள்ளதாகவும் இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து குறித்த செயலில் ஈடுபடுபவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவ்வீதியூடாக பயணிப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறங்குதுறை பிரச்சினைக்கு தீர்வுகோரி யாழில் கடற்றொழிலாளர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

சாவல்கட்டு இறங்குதுறை பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு கோரி கடற்றொழிலாளர்களால் யாழில் நேற்று காலை கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட சாவல்கட்டு மீனவர்கள், மாவட்ட செயலாளரை சந்தித்து தமது தமது பிரச்சினைகள் தொடர்பில் விளக்கமளித்தனர்.

அதனைத் தொடர்ந்து, பேரணியாக வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு சென்று ஆளுநர் செயலக நுழைவாயிலை மறித்து நுழைவாயில் முன்பாக அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த வட மாகாண ஆளுநரின் செயலாளர் "ஆளுநர் தற்போது இங்கு இல்லாத காரணத்தினால் சந்திக்க முடியாது எனவும் நாளை ஆளுநரை சந்திக்கமுடியும்" என கூறியதை அடுத்து போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதையடு த்து மீனவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (நி-5-6)

# அஜித்டோவல்-அநுர சந்திப்பு

(கொழும்பு)

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்று முன்தினம் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவலை சந்தித்து கலந்துரையாடினார்.

சந்திப்பில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய பாதுகாப்பு குறித்து கலந்துரையாடியதாக அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் விஜித ஹேரத்தும் கலந்து கொண்டார். (நி-5-6)

# 2024 ஆம் ஆண்டு தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் 10 பில்லியன் ரூபாவை தேர்தல்களை நடத்துவதற்காக அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

அரசு கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட நிதி இயலுமையில் 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் 10 பில்லியன் ரூபா தேர்தல்களை நடத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்குரிய செலவுகளை குறித்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து முகாமைத்துவம் செய்ய வேண்டுமெனவும் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

எனினும் அந்த இரண்டு தேர்தல்களையும் நடத்துவதற்கு முன்னர் தேவை ஏற்பட்டால் தொடர்புடைய தேர்தல் சட்டங்களுக்கான திருத்தங்களை பாராளுமன்ற அங்கீகாரத்தின் அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட வேண்டுமெனவும் அமைச்சரவை மேலும் கவனம் செலுத்தியுள்ளது.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறித்த விடயங்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவிப்பதற்கு தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சாந்தன் நாடு திரும்புவதற்கு எந்தவித தடையும் இல்லை

## வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்துவந்த நிலையில் விடுவிக்கப்பட்டுள்ள சாந்தன் எனப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராசா மீண்டும் நாடு திரும்புவதற்கு எந்தவித தடையும் இல்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். இருநாடுகளிலும் இருந்து சாந்தன் இலங்கை திரும்புவதற்கான கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், அவர் நாடு திரும்புவதில் எந்தவித தடையும் இல்லை என்பதுடன், இலங்கை அரசாங்கம் எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார். எனவே, எந்த சந்தர்ப்பத்திலும் சாந்தனுக்கு நாடு திரும்ப முடியும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். (நி-5-6)


## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் **2024.03.01** ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. முழுநேரமாக யாழ். மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
2. இந்நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனைச் சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர்நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்தக் கொடுப்பனவு ரூபா **125,000** ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரெண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :-** ***20.02.2024 மு.ப 10.00***

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்** (C-8291) **07.02.2024**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.விஜயபாலசிங்கம் விஜயசங்கர்
Dip in Teaching,
B.Ed (Maths)



திருமதி.தீபா சதீஸ்குமார்
Dip in Teaching,
B.Ed (Primary)



திருமதி.கிருஷாந்தி முரளிநாத்
Dip in Teaching,
B.Ed (Science)

Congratulations

31.01.2024 அன்று BMICH இல் கல்வி இளமாணி பட்டம் (B.Ed) பெற்றுக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியர்களை வாழ்த்துவதுடன் அவர்கள் மென்மேலும் கல்வியிலும் தொழிலிலும் உயர்வுபெற வாழ்த்துகின்றோம்.


ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

(18913)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியாவை புகழ்ந்த பிரான்ஸ் ஜனாதிபதி



(பாரிஸ்)

உலகில் ஏற்படக்கூடிய மாற்றங்களில் இந்தியா முன்னிலை இடத்தை வகிக்கும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

குடியரசு தின விழாவில் பங்கேற்று நாடு திரும்பிய மக்ரோன், தனது எக்ஸ் தள பக்கத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் இந்தியா தொழில்நுட்ப ரீதியாகவும் ஜனநாயக பலத்துடனும் பொருளாதார வளர்ச்சியை அடைந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் அவரது கருத்துக்கு நன்றி தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, மக்ரோனின் வருகையால் இந்தியா -பிரான்ஸ் இடையிலான நட்பு வலுப் பெற்று உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இராணுவ நிலைக

# பதிலடி கொடு

## ஆயுதக்குழுக்களை எச்

(வோஷிங்டன்)

**அமெரிக்க இராணுவ நிலைகள் மீது இ ஆதரவுப் படையினர் தாக்குதல்களை நடத்தின உடனடியாக தக்க பதிலடி வழங்கப்படும் என அ தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவ துள்ளார்.**


சிரியாவிலும் ஈராக்கிலும் இருக்கும் ஈரான் ஆதரவுப் படையிரும் ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களும் அமெரிக்க இராணுவ நிலைகளில் தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்பு இருப்பதனால் அத்தகைய தாக்குதல்களுக்கு உடனடியாக பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்க தளபதிகள் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் தொடங்கிய நாளிலிருந்து பல்வேறு அமெரிக்க இராணுவ நிலைகளில் சுமார் 160 முறை ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

போரில் ஹமாஸ்'க்கு தங்களது ஆதரவைத் தெரிவிக்கும் முகமாகவே ஈரான் ஆதரவு ஆயுதக் குழு

## இம்ரான்கானுக்கு 4 வழக்குகளில் 34 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(இஸ்லாமபாத்)



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் பல்வேறு ஊழல் வழக்குகளில் கைது செய்யப்பட்ட நிலையில் இதுவரை 4 வழக்குகளில் 34 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு வழக்குகளில் இம்ரான்கானுடன் அவரது மனைவி புஷ்ரா பீவியும், முன்னாள் வெளியுறவு அமைச்சர் மஹ்மூத் ஷா குரேஷியும் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இம்ரான்கானும், குரேஷியும் அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் புஷ்ரா பீவி, கிளைச் சிறையாக அறிவிக்கப்பட்ட இம்ரான்கானின் இல்லத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அடியாலா சிறையில் இம் ரான்கானுக்கும், குரேஷிக் கும் உயர்மட்ட கைதிகள் என்ற அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் உயர்மட்ட கைதிகளாக உள்ள போதிலும் இம்ரான் கானும் குரேஷியும் சிறை வாளகத்தில் பணிகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயம் என சிறை நிர்வாகம் புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது. (நி-5-6)

## மனிதர்களின் உயி 'கேண்டிடா ஆரிஸ்'

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் மனிதர்களின் உயிரைப் பறிக்கும் "கேண்டிடா ஆரிஸ்" எனும் பூஞ்சை தொற்று பரவ தொடங்கியுள்ளது.

இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ள நிலையில் பூஞ்சை தொற்று பாதித்தால் என்ன நடக்கும் என்பது பற்றிய திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

2019 ஆம் ஆண்டு இறுதியில் சீனாவில் கொரோனா வைரஸ் பரவ தொடங்கியது. இந்த வைரஸ் அடுத்த 2 ஆண்டுகளில் உலகம் முழுவதும் பரவி மொத்தமாக மனிதர்களை முடக்கியது. இந்த வைரஸ் பாதிப்பில் இருந்து மக்கள் மீண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தான் அமெரிக்காவில் தற்போது "கேண்டிடா ஆரிஸ்" எனும் பூஞ்சை தொற்று வேகமாக பரவ தொடங்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இந்த பூஞ்சை தொற்று என்பது மனிதர்களின் உயிரை பறிக்கும் திறனை அதிகம் கொண்டுள்ளதால் அமெரிக்க மக்கள் அதிர்ச்சியில் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களை தாக்கினால்

# டுக்கப்படும்

## எச்சரிக்கும் அமெரிக்கா

**இனியும் ஈரான்**
**த்தினால் அதற்கு**
**அமெரிக்காவின்**
**லிவன் தெரிவித்**



வினர் இஸ்ரேலுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள அமெரிக்காவின் இராணுவ நிலைகளைக் குறிவைப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால், தங்கள் இராணுவ நிலைகள் மீது ஈரான் ஆதரவு பெற்ற ஆயுதக் குழுவினர் மீண்டும் தாக்குதல் நடத்தினால் கடந்த வாரத்தில் நிகழ்த்தப்பட்டதைப் போல் அவர்கள் மீது மிகக் கடுமையான பதிலடித் தாக்குதல் நிகழ்த்தப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

எனவே, தனது ஆதரவுப் படையைக் கொண்டு மீண்டும் தாக்குதல் நடத்த ஈரான் சிந்தித்தால், அதற்கும் கடுமையான பதிலடி மிகத் துரிதமாகக் கிடைக்கும் என்பதை அந்த நாடு புரிந்துகொள்ள வேண்டும் என அமெரிக்கா கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பிரித்தானிய மன்னர் புற்றுநோயால் பாதிப்பு



(லண்டன்)

இங்கிலாந்து மன்னர் 3 ஆம் சார்ள்ஸ்க்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கான சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து அரச பரம்பரையின் தற்போதைய அரசர், மூன்றாம் சார்ள்ஸ் அவரது தாயார் அரசி இரண்டாம் எலிசபெத் கடந்த 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் காலமானார்.

அதை தொடர்ந்து மூன்றாம் சார்ள்ஸ் அரசராக பதவி ஏற்றார். சில மாதங்களாக புரோஸ்டேட் சுரப்பி வீக்க பிரச்சினையால் அரசர் சார்ள்ஸ் அவதிப்பட்டு வந்தார்.

இதற்காக அவர் லண்டனில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.


இந்நிலையில் அரசருக்கு புற்றுநோயின் ஒரு வகை கண்டறியப்பட்டு உள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ள அறிக்கையால் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்ட அறிக்கையில், புரோஸ்டேட் சிகிச்சைகாக மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்ற போது மேலும் சில பிரச்சனைகள் இருப்பது தெரியவந்தது.

அதன்பிறகு நடந்த பரிசோதனையில் அவருக்கு புற்றுநோயின் ஒரு வகை கண்டறியப்பட்டு உள்ளது. (நி-5-6)

# உயிரைப் பறிக்கும்

# ஸ்' பூஞ்சை தொற்று



அதாவது அமெரிக்காவின் வோஷிங்டனில் கடந்த மாதம் ஒருவருக்கு கேண்டிடா ஆரிஸ் பூஞ்சை தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டது.


அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரும்போதே சியாட்டில் 3 பேருக்கு பாதிப்பு உறுதிசெய்யப்பட்டது.

தற்போது வரை 4 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதனால் சுகாதார நிபுணர்களும் பொதுமக்களும் அச்சமடைந்துள்ளனர். மேலும் இந்த பூஞ்சை தொற்று பாதிப்பு ஏற்பட்டால் முதலில் அது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு மண்டலத்தை தான் பாதிக்கும். மேலும் உணவு குழாய், சுவாச குழாய்களை தாக்கும்.

மேலும் இந்த "கேண்டிடா ஆரிஸ்" பூஞ்சை தொற்று கிருமி மனிதரின் தோலில் இருந்து கொண்டே இன்னொருவருக்கும் பரவும் தன்மை கொண்டது. இதன்மூலம் ஒருவர் பாதிப்புக்கு உள்ளாகாமலே மற்றவருக்கு நோய் கிருமியை அனுப்ப முடியும். (நி-5-6)

# ஹவுதி போராளிகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கு உதவும் கனடா



(ஒட்டாவா)

ஏமனில் ஹவுதி போராளிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களுக்கு கனடா உதவிகளை வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

செங்கடல் பகுதியில் ஹவுதி போராளிகள் வர்த்தக கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

பாலஸ்தீனம் மீதான போரை நிறுத்திக் கொள்ளுமாறு கோரி ஹவுதி போராளிகள் இந்த தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த தாக்குதல்களை தடுக்கும் நோக்கில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஏமனில் அமைந்துள்ள ஹவுதி நிலைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த தாக்குதல்களுக்கு அவுஸ்திரேலியா, டென்மார்க், நெதர்லாந்து, நியூசிலாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

இது தொடர்பில் கனேடிய அரசாங்கம் கூட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

நேரடியான உதவிகள் அன்றி திட்டமிடல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் கனடா பங்களிப்பினை வழங்கி வருவதாக தெரிவித்துள்ளது.

எனினும், ஹவுதி போராளிகள் மீதான தாக்குதலுக்கு கனேடிய இராணுவத்தின் ஆயுதங்கள் எதுவும் பயன்படுத்தவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஹவுதி போராளிகளின் பல்வேறு இராணுவ களஞ்சியங்கள் உள்ளிட்ட முக்கிய நிலைகள் மீது அமெரிக்க பிரித்தானிய படையினர் கூட்டாக இணைந்து தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் வர்த்தக கப்பல்கள் மீதான தாக்குதல்களை நிறுத்திக் கொள்ளப் போவதில்லை என ஹவுதி போராளிகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழமைக்கு இரண்டிற்கு தினம் ஒரு கீரை



பேராசிரியர்
கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கீரை வகைகள் இயற்கையாகவே நமதுணவில் தவிர்க்க முடியாத ஒரு உணவாகும். இவை பச்சையாகவே உண்ணக் கூடியனவாக இருந்தாலும் செரிமானத்தை ஊக்கப்படுத்தவும் இலகுவில் அகத்துறுஞ்சப்படவும் இவற்றைவிட அன்றி ஒட்சிடென்கள் அதிகமாக உள்ள அத்துணை சக்தி வாய்ந்த மதிப்புமிக்க கீரை வகைகளை ஊட்டச்சத்து அதிகம் தேவைப்படுகின்ற குழந்தைகள், இளையவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் இன்னும் ஏனையோரும் தமது உணவில் அவசியம் இடம்பெற முயற்சிக்க வேண்டும். கீரை வகைகள் சேதன முறையிலேயே வளர்த்துக் கொள்ளலாம்.

அதிலும் கிராமப்புறம் தவிர்ந்த நகர்ப்புறங்களில் கூட வீட்டினில் கிடைக்கின்ற நிலப்பரப்பில், சாடிகளில், நான்கு புறமும் கட்டியெழுப்பியிருக்கும் மதில் சுவர்களில் நிலைக்குத்தான பயிர்வளர்ப்பாக இவற்றை இலகுவாக வளர்த்துக் கொள்ளலாம். கீரை வகைகள் வளர்வதற்கு அதிகம் இடுபொருட்கள் தேவைப்பட மாட்டாது. வீட்டில் சமையலறையில் கிடைக்கும் கழிவுகளை இலகுமுறையில் மீள் சுழற்சி செய்து இயற்கைப் பசளைகளை உருவாக்கிக் கொள்ளலாம். சிறிய மண்புழு வளர்ப்பு அலகை வீட்டின் ஓரத்தில் உருவாக்கி மண்புழு உரம், மண்புழு திரவம் மற்றும் மண்புழு தேநீர் என்பனவற்றை நீங்களாகவே உற்த்தி செய்து கொள்ளலாம். கிடைக்கின்ற வீட்டு கழிவுகளை முறையாக சேகரித்து அவற்றிலிருந்து இயற்கையாக பசளைகளை பெறலாம்.


இயற்கை தந்த இலகுவாக வளர்த்துக் கொள்ளக் கூடிய கீரை வகைகள் எம்மிடம் இருக்கையில் இவற்றை பொழுதுபோக்காக வளர்க்கும் பொறிமுறையை அறிந்து கொண்டால் உணவு மூலமாகவே இவற்றை நாம் உள்ளெடுத்துக் கொள்ளும் போது கீழ்க் குறிப்பிட்ட நோய்களுக்காக மருத்துவரை தேடி யோட வேண்டிய தேவை ஏற்படாது. மாறாக உடல் உஷ்ணத்தை குறைத்து குளிர்மையாக ஊட்டச் சத்து நிறைந்ததாக சம நிலையில் வைத்திருக்கும் பலவகை பசுங்கீரை வகைகள் எமது ஊட்டச் சத்தை இலகுவில் பெற எமக்குதவும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...

எமது வீடுகளில் கிடைக்கின்ற நிலப்பரப்பில் சூரிய ஒளிபடுகின்ற இடத்தில் சிறு அளவில் அனைத்து கீரை வகைகளையும் வளர்த்துக் கொள்ளலாம். முருங்கையை உயிர்வேலிகளில் நடுகை செய்து விட்டால் முருங்கைக்காயை தேவையான போது அறுவடை செய்வதுடன் கிழமைக்கு ஒன்றாக அதன் இலையையும் எமது சமையல் நிரலுக்குள் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆஸ்துமா நோயை குணமாக்க தூதுவளைக் கீரை, இரத்த சோகைக்கு பசளைக்கீரை, ஆஸ்துமாவுக்கு முசுமுசுக்கை, உயர் இரத்த அழுத்தத்தைத் தீர்க்க பருப்புக்கீரை, எலும்பு தேய் மானத்திற்கு முருங்கைக் கீரை, எலும்பிற்கு வலுச் சேர்க்க இளம் பிரண்டை, சிறுநீர் பிரச்சினையை தீர்க்கும் சிறுகீரை, நீரி ழிவுக்கு வெந்தயக்கீரை, கல்லீரலிலுள்ள பிரச்சினைகளுக்கு கரிசாலை, காமாலைக்கு கீழாநெல்லி, குடல் புண்ணை ஆற்றும் மணத்தக்காளிக் கீரை, பல்லுக்கு வேலாலன், பசியின்மைக்கு அகத்திக் கீரை மற்றும் சீரகமிஞ்சி, பார்வைகோளாறை நீக்கும் பொன்னாங்காணிக் கீரை, மஞ்சள்காமாலைக்கு கரிசலாங்கண்ணி கீரை, மலச்சிக்கலைதீர்க்க முளைக்கீரை, மூட்டு வலியை நீக்கும் முடக்கத் தான் கீரை, தோல் நோய்களை தீர்க்கும் அரைக் கீரை, முடிவளர நீலிநெல்லி, மூளைக்கு மற்றும் ஞாபக மறதியைப் போக் கும் வல்லாரைக் கீரை என பல்வகைக் கீரை வகைகள் பலவுண்டு. இயற்கையாக விரைந்து வளரக்கூடிய இவ்வாறான மூலிகைகளை எம்முடைய பிரதேசத்தில் சிறியதாக வளர்த்து தினமும் உட்கொள்ளலாம்.

மேற்கூறிய கீரைவகைகளை விட இன்னும் பலவுண்டு. கிராமப்புறங்களில் மக்கள் தாமாக இவற்றை சேகரித்து உணவாக்கும் விதத்தையும் நாம் காணலாம். நாளுக்கொரு கீரை என நாம் கணக்கில் வைத்துக் கொண்டால் எமக்குத் தேவையான அனைத்து ஊட்டச் சத்துக்களையும் காசு பணமின்றி நாமே வளர்த்து உண்ணும் நிலையுண்டே.



இந்த கீரை வகைகள் சிறந்ததாக, சுகாதாரமான முறையில் சேதன வழியில் சிறு தொட்டிகளில் எமது மனைகளில் கிடைக்கின்ற இடவசதியுள்ள இடங்களில் வளர்த்துக் கொள்ள முடியும். சரியான கீரை வகைகளை இனங்கண்டுஅவற்றை உட்கொள்ளுவதனால் எமது உடலுக்கு தேவையான, அவசியமான விற்றமின்கள், நார்ச்சத்துக்கள் கிடைக்கச் செய்ய முடியும். மருந்து வகைகளை வாங்கி உணவாகக் கொள்ளாமல் பசுமையான கீரை வகைகள் எமது சுகாதாரத்தை மேம்படுத்துவதோடு தேவையான ஊட்டச்சத்துகளையும் வழங்கும்.

# இன்று ஒரு தகவல் 29



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நன்றி

சார்!

இன்று ஒரு தகவலை தொடர்ந்து கேட்டுக்கொண்டு வந்ததாலே, இப்ப நீங்க என்ன நிலைமையில் இருக்கீங்க என்று எனக்கு ஒரு தகவலும் தெரியவில்லை.

தகவலை சொல்லி விட்டு வந்ததாலே நான் என்ன நிலைமையில் இருக்கிறேன் என்பதும் உங்களுக்கு தெரியாது.

ஏன்னா என்னுடைய முகத்தை உங்களாலே பார்க்க முடியவில்லை. உங்களுடைய முகத்தையும் என்னால் பார்க்க முடியவில்லை.

பார்த்தாலும் பாராட்டுகிறீங்களா? பல்லைக் கடிக்கிறீங்களா என்பதை கண்டுபிடிப்பது ரொம்ப கஷ்டம்.

நீங்கள்அமைதியாக கேட்டுக்கொண்டே இருப்பதால் நான் தனியாக பேசிக்கொண்டு போவது சரியில்லை.மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று சொல்லுவாங்க. இருந்தாலும் எல்லா மௌனத்திற்கும் சம்மதம் என்று எண்ணிக்கொள்ள முடியாது.

என்னமோ நான் சொல்லுவதற்கெல்லாம் நீங்க தலையாட்டிக் கொண்டு இருக்கிறதனால எல்லாத்தையும் ஒத்துக்கொண்டீர்கள் என்று எண்ணிக் கொள்ள முடியாது. எதுக்கு இவ்வளவு தூரம் சொல்லுகிறேன் என்றால்...

ஹிட்லர் என்பவர் இருந்தாரே.

அவர் கூட என்ன சொன்னாலும் எல்லோரும் கேட்டுக்கிட்டு தான் இருந்தாங்க.அவரிடம் வேலை செய்தவர்கள் எல்லோரும் அவர் கிழித்த கோட்டை தாண்டினதே இல்லை. என்ன சொன்னாலும் ஏன்? எதுக்கு என்று கேட்காம அவர் சொன்னதை செய்து கொண்டு இருந்தாங்க.

ஒரு ஆங்கிலேய அரசியல்வாதி ஹிட்லரை பார்ப்பதற்காக போனாராம். அப்போது ஹிட்லர் ஒரு கப்பலின் மேற்தளத்தில் நின்று கொண்டு பேசிக் கொண்டு இருந்தாராம். "நல்ல வேளை நீங்க பின் வாங்கினது நல்லதா போய்விட்டது. இல்லை என்றால் உங்களை நான் அடியோடு அழித்திருப்பேன். உங்களுக்கு தெரியுமா என்னோட ஆட்களைப் பற்றி. நான் சொல்லுவதை அப்டியே செய்வார்கள். ஏன்? எதுக்கு என்று கேள்வி கேட்க மாட்டார்கள் என்று பெருமையாக சொன்னார் ஹிட்லர்.

ஆங்கிலேய அரசியல்வாதிக்கு ஆச்சரியம்! அப்படியா? என்று கேட்டார். ஏன் இப்படி கேக்குறீங்க? இப்போ நான் அதை நிரூபித்து காட்டவா? என்று ஆரம்பித்தார்.

உடனே கையை தட்டி ஒருத்தனை கூப்பிட்டார். உடனே ஒரு வீரன் கம்பீரமாக வந்து முன்னாடி நின்றான். ஹிட்லர் அவனை பார்த்து கடலிலே குதி என்று சொன்னார். உடனே அவன் பொத்தென்று கடலிலே விழுந்து செத்துப் போய்விட்டான். ஹிட்லர் மறுபடியும் கை தட்டினார். இன்னொருத்தன் வந்து நின்றான். குதி என்றார். ஏன் எதற்கு என்று கேள்வி கேட்காமல் கடலில் குதித்து மூழ்கிப் போய்விட்டான்.

அரசியல்வாதிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவர் ஆச்சரியத்தை இன்னும் அதிகப்படுத்துவதற்காக ஹிட்லர் மறுபடியும் கையைத் தட்டினார். மூன்றாவது ஆள் வந்து நின்றான். குதி என்றார் குதிக்கப் போனான். உடனே அந்த ஆங்கிலேய அரசியல்வாதி ஓடிப்போய் அவன் கையை பிடித்துக்கொண்டார். பிடித்து கொண்டு சொன்னார் உனக்கு என்ன பைத்தியமா? அவர் சொல்லுகிறார் என்றதுக்காக அப்படி குதித்து உயிரை விடுவதா என்று கேட்டார்.

அதற்கு அந்த ஆளு.

அட போய்யா? இந்த மனிதனிடம் வேலை செய்யிறதை விட கடலில விழுந்து சாகிறது எவ்வளவோ மேல் என்னை விடு என்று சொல்லிக் கொண்டு கையை பிடுங்கி கொண்டு கடலிலே குதித்து விட்டான்.

அதனாலே எல்லா மௌனமும் சம்மதத்திற்கு அறிகுறி என்று நினைத்துக் கொள்ள முடியாது.

உங்க மௌனத்தை அப்படி நான் நினைக்கவில்லை. இருந்தாலும் அதை நினைக்கும் பொழுது இந்த நினைப்பும் வந்து விடுகிறது. என்ன செய்வது?

இவ்வளவும் எதுக்கு சொல்லுகிறேன் என்று சொன்னா இன்றைக்கு நான் உங்களிடம் விடைபெறுகிறேன். மறுபடியும் சமயம் கிடைக்கும் நாம சந்திக்கலாம்.


இந்த புத்தகத்தை ஆரம்பிக்கும் பொழுது வணக்கம் என்று சொல்லி ஆரம்பிச்சோம். எந்தெந்த ஊரில எப்படி வணக்கம் சொல்லுறாங்க என்று சொன்னோம். ஏதோ ஒரு ஊர் பாணியிலே உங்களுக்கு வணக்கம் சொன்னேன்.

இப்ப நான் நம்ம ஊர் பாணியிலே வணக்கம் சொல்லாம் என்று நினைக்கிறேன். நம்ம ஊர் பாணியிலே நன்றி சொல்லுவது என்றால் மூன்று நன்றி போட்டு ஆச்சரியக்குறி போட்டு போஸ்டர் அடிச்சு அதை உங்க வீட்டு கதவில எல்லாம் கொண்டு வந்து ஒட்டணும். அதிகம் செலவாகும். அதனாலே சிக்கனமா நோட்டீஸ் அடிக்கிறதுக்கு பதிலாக நேரிலேயே சொல்லி விட்டேன். ஆச்சரியக்குறி நீங்களே போட்டுக் கொள்ளுங்க ! என்ன சொல்லவா?

நன்றி! நன்றி! நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி அறிவியல் நகருக்கு விஜயம் செய்த கல்வி அமைச்சர்



(முறிகண்டி)

கிளிநொச்சி ஜேர்மன் ரெக் நிறுவனத்திற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள ஜேர்மன் ரெக் நிறுவனத்தின் செயற்பாடுகளை கண்காணிக்கும் மற்றும் குறை நிறைகளுக்கு தீர்வுகாணும் நோக்குடன் குறித்த விஜயம் இடம்பெற்றது.

இதன்போது, தொழில்சார் கல்வி செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்த அவர், நிறுவன முதல்வர், மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து, குறித்த நிறுவனத்தின் செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுக்கவும் தொழில்சார் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையிலும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த நிகழ்வில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், இலங்கை ஜேர்மன் ரெக் நிறுவன தலைவர் மேஜர் ஜெனரல் கல்ப சஞ்ஜீவ, கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-100-316)

# கொட்டப்படும் கழிவுகளால் மக்கள் அசௌகரியம்

(அக்கராயன்)


உமையாள்புரத்தில் கொட்டப்படும் கழிவுகளில் இருந்து வீசும் துர்நாற்றம் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கிளிநொச்சி, பரந்தன் நகரங்களின் கழிவுகள் உமையாள்புரத்தின் தொடரூந்து பாதையினை கடந்து சுட்டதீவு பகுதியில் கொட்டப்படும் நிலையில் தற்போது குறித்த வீதி சேறும் சகதியுமாக காணப்படுகிறது.

தண்டவாளத்திற்கு அருகில் கழிவுகள் அடிக்கடி கொட்டப்படுவதன் காரணமாக குப்பைகளில் இருந்து வீசும் துர்நாற்றத்தினால் அப்பகுதி மக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

கழிவுகளை உரிய இடத்தில் கொட்டுவதற்கான நடவடிக்கை களை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-5-6-350)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 7 லட்சம் போதை மாத்திரைகள் பறிமுதல்



(மன்னார்)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 7 லட்சம் வலி நிவாரணி மாத்திரைகள் நேற்று முன்தினம் இரவு படகுடன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி அடுத்த புதுமடம் கடற்கரையில் இருந்து நாட்டுப்படகில் வலி நிவாரணி மாத்திரைகள் இலங்கைக்கு கடத்தப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த மரைன் பொலிஸார் பெரிய பட்டினம் கடற்கரையில் வைத்து ஒரு நாட்டுப் படையும் அதிலிருந்து சுமார் 7 லட்சம் வலி நிவாரணி மாத்திரைகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

மேலும் வலி நிவாரணி மாத்திரைகளை இலங்கைக்கு கடத்தி சென்ற பெரிய பட்டினத்தைச் சேர்ந்த ஒருவர் கைதான நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-285)

# இடைநிறுத்தப்பட்ட அம்புலன்ஸ் சேவை பாதிப்பிற்குள்ளாகியுள்ள நோயாளர்கள்

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(முறிகண்டி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பிரதேசத்துக்கான இலவச அம்புலன்ஸ் சேவை கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் முள்ளியவளை, மணலாறு பகுதிகளிலும் சேவை பல நாட்களாக இடம்பெறவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 3 மாதங்களாக மாங்குளம் பகுதியில் குறித்த சேவை இல்லாமை காரணமாக அதனை அண்டிய பகுதிகளில் உள்ள பல்வேறு பிரதேச மக்கள் பெரும் துயரங்களை சந்தித்து வருகின்றனர்.

குறிப்பாக மாங்குளம் பிரதேசத்தை அண்டிய பாண்டியகுளம், நட்டாங்கண்டல், மல்லாவி, கோட்டைக்கட்டிய குளம், அம்பலபெருமாள்குளம், அம்பகாமம், தட்சடம்பன் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1990 எனும் இலவச அம்புலன்ஸ் சேவையை நாளாந்தம் மக்கள் பெற்று வரும் நிலையில் தற்போது மூன்று மாதங்களாக இந்த அம்புலன்ஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் பெரும் துயரங்களிற்கு தள்ளப்பட்டுள்ளதுடன், சிரமங்களையும் எதிர்கொள்கின்றனர். குறிப்பாக நட்டாங்கண்டலில் இருந்து மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமெனில் 3000 ரூபாய் முச்சக்கர வண்டிக்கு செலுத்தி செல்ல வேண்டும். அதேவேளை, உரிய நேரத்துக்குள் சிகிச்சையை பெற வேண்டிய நோயாளர்கள் உயிரிழக்கும் அபாய நிலையும் ஏற்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கையை முன்வைக்கின்றனர். (நி-5-6-100-299)

# 2468 போத்தல் கோடாவுடன் சந்தேகநபரொருவர் கைது

(தருபமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 2468 போத்தல் கோடாவுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கனை கோரை மூட்டைப் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேக நபரொருவர் 2468 போத்தல் கோடாவுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள் ளது.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தி தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (நி-5-6-316)

# விவசாயிகளின் நலனில் அரசு அக்கறை செலுத்துவதே இல்லை



(கண்டாவளை)

அரசாங்கமானது விவசாயத்தை நவீனமயப்படுத்துவதாக தெரிவித்துக்கொண்டு விவசாயிகளை நடுத்தெருவுக்கு கொண்டு வந்து விடும் முயற்சியையே செய்து வருகின்றது என விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை எழுபதாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நடைபெற்று வருகின்ற இந்நிலையில் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் நெல்லை கொள்வனவு செய்யவில்லை. இதன் காரணமாக தனியார் வர்த்தகர்களுக்கு விவசாயிகள் குறைந்த விலைகளில் நெல்லை விற்பனை செய்ய வேண்டிய நிலையில் விவசாயிகள் தொடர் நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

பெரும்போகத்தின் போது ஏற்பட்ட நோய்த்தாக்கம் மற்றும் மழை வெள்ளம் என்பவற்றாலும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்ட விவசாயிகள் இவ்வாறான நிலையில் மேலும் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

விவசாயிகளின் நலன்களில் அரசு அக்கறை செலுத்துவதாக இல்லை. விவசாயிகளாகிய எங்களை நடுத்தெருவுக்கு கொண்டு வந்து விடும் நிலைக்கு ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்தனர். (நி-5-6-315)

# கட்டுப்பாட்டை இழந்து கடைக்குள் புகுந்த கார்



(தருமபுரம்)

விசுவமடுவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கார் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் A.35 பிரதான வீதியின் புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த கார் மோட்டார் சைக்கிள் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளை கட்டுப்பாட்டை இழந்த கார் அருகில் இருந்த விற்பனை நிலையமொன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 2 மோ.சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் சைக்கிள் ஒன்றையும் மோதித்தள்ளியுள்ளது.

எனினும் குறித்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இது தொடர்பில் தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 399





போதி சங்கம் மிக்க மகிழ்ச்சி அடைந்திருக்கின்றது. நாங்கள் குறிப்பிட்ட நிபந்தனைகளையெல்லாம் ஒப்புக்கொண்டு பல சிரமங்களுக்கு உட்பட்டு வந்திருக்கிறீர்கள். புத்த பகவானுடைய கருணை தங்களிடம் பூரணமாக இருப்பதற்கு வேறு அத்தாட்சி தேவையில்லை!" இவ்விதம் பாளி பாஷையில் பெரிய குரு கூற, இளவரசரை அழைத்து வந்த பிக்கு தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார். மற்ற பிக்குக்கள், "சாது! சாது!" என்று கோஷித்துத் தங்கள் சந்தோஷத்தை வெளியிட்டார்கள்.

மகா தேரோ மேலும் கூறலுற்றார்!-" இலங்கைத் தீவுக்குப் புத்த தர்மத்தை அனுப்பிய பாரத வர்ஷத்துக்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் ஆதி நாளிலிருந்து உங்கள் நாட்டிலிருந்து படையெடுத்து வந்த சோழர்கள், பாண்டியர்கள், மலையாளத்தார், கலிங்கத்தார் எல்லோரும் இங்கே பல அட்டூழியங்களைச் செய்த்துண்டு. புத்தவிஹாரங்களையும் பிக்குக்களின் மடாலயங்களையும், குருகுலங்களையும் அவர்கள் இடித்துத் தள்ளித் தேவர்களின் சாபத்துக்கு ஆளானார்கள். உங்கள் நாட்டவரைச் சொல்வானேன்? இந்த நாட்டின் மன்னர்களே அத்தகைய கோர கிருத்யங்களைச் செய்திருக்கிறார்கள். புத்த சங்கத்தில் பிரிவினையை ஏற்படுத்தினார்கள். தங்களுடைய தீய செயல்களை எதிர்த்த பிக்குக்களின் விஹாரங்களை இடித்தார்கள் அக்கினிக்கு இரையாக்கினார்கள். இரண்டு காத நீளமும் ஒரு காதம் அகலமும் உள்ள இந்த விசாலமான புண்ணிய நகரத்தில் ஒரு சமயம் பாதி விஸ்தீரணத்தில் புத்த விஹாரங்கள் இருந்தன. அவற்றில் பெரும் பகுதி இன்று இடிந்து பாழாய்க் கிடக்கின்றது. இடிந்த விஹாரங்களைப் பழுது பார்த்துச் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும் என்று இது வரை எந்த அரச குலத்தினரும் கட்டளையிட்டதில்லை. அத்தகைய ஆக்ஞை பிறப்பிக்கும் பாக்கியம் இளவரசர் அருள்மொழிவர்மருக்கே கிடைத்தது. தேவர்களுக்கு உகந்தவரே! தங்களுடைய இந்தச் செய்கையைப் புத்த மகா சங்கம் பெரிதும் பாராட்டுகிறது."

இளவரசர் தலை வணங்கி மகா தேரோவின் வாழ்த்தை ஏற்றுக்கொண்டார். "இன்னும் இந்தப் புராதன புண்ணிய நகரத்தில் வெகுகாலமாகப் பெரஹரா உற்சவம் நடைபெறாமல் தடைப்பட்டிருந்தது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டியர்கள் ஒரு சமயம் இந்த மாநகரத்தைப் பிடித்தார்கள். அப்போது இலங்கை அரச குலத்தார் புலஸ்திய நகரம் சென்றார்கள். அது முதல் இங்கே பெரஹராத் திருவிழா நடைபெற்றதில்லை. இந்தப் புண்ணிய வருஷத்தில் தாங்கள் அவ்வுற்சவம் மீண்டும் நடைபெறலாம் என்று கட்டளையிட்டீர்கள். அதற்கு வேண்டிய வசதியும் அளித்தீர்கள். இது பற்றியும் புத்த சங்கத்தார் சந்தோஷமடைந்திருக்கிறார்கள்."

இளவரசர் மீண்டும் சிரம் வணங்கி, "மகாகுருவே! அடியேன் புத்த சங்கத்தாருக்கு இன்னும் ஏதேனும் சேவை செய்யக்கூடியதாக இருந்தால் கருணைகூர்ந்து பணித்தருள்க!" என்றார்.

அத்தியட்சகர் புன்னகை புரிந்து, "ஆம், இளவரசே! புத்த சங்கம் மேலும் தங்களுடைய சேவையை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது. அதற்கு முன்னதாக இன்னும் சில வார்த்தைகள் கூறவேண்டும்.

(தொடரும்...)

பிக்குக்களின் அத்தியட்சகர் சிங்காதனத்துக்கு அருகில் கிடந்த ஒரு சாதாரண பீடத்தைச் சுட்டிக்காட்டி, அதில் அமரும்படி இளவரசரை வேண்டினார்.

"மகா குருவே! இச்சிறுவனுக்கு முன்னால் பிராயத்திலும், தர்மத்திலும் மூத்தவர்களாகிய தாங்கள் அமர வேண்டும்" என்று வேண்டினார் இளவரசர்.

அத்தியட்சக மகா குரு தமது பீடத்தில் அமர்ந்ததும் இளவரசரும் தமக்கென்று குறிப்பிட்ட ஆசனத்தில் பணிவுடன் உட்கார்ந்தார்.


"தேவர்களின் அன்புக்குரிய இளவரசரே! தங்கள் வருகையினால் இந்த மகா

---



# சிறுவர் அரங்கம்

## ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாடம்



ஒரு கிராமத்துக்கு பக்கத்து காட்டுல ஒரு முயல் வீடுகட்டி வாழ்ந்துகிட்டு வந்துச்சு.

ரொம்ப அழகா அந்த வீட்ட கட்டி வாழ்ந்துகிட்டு வந்த முயல் ஒருநாள் இரை தேடி வெளியே போச்சு.

அந்த நேரம் அங்க ஒரு எலி வந்துச்சு , சுத்தமா இருந்த முயலோட வீட்ட அசுத்தம் செஞ்சுச்சு அந்த எலி.

படுக்கை எல்லாம் கலைச்சி போட்டு, அங்க இருந்த பொருளை எல்லாம் தட்டிவிட்டு அலங்கோலப்படுத்துச்சு அந்த இடத்த.

வீட்டுக்கு திரும்பி வந்த முயல் எலி அங்கே படுத்து கிடக்கிறத பார்த்துச்சு.

உடனே முயலுக்கு ரொம்ப கோபம் வந்திச்சு உடனே எலிய ஒரு அடி அடிச்சிச்சு.

கோபமான எலியும் முயல அடிக்க ஆரம்பிச்சிச்சு.

அப்ப அந்த பக்கமா ஒரு பூனை வந்திச்சு. முயலும் எலியும் சண்டை போடுறத பார்த்திச்சு அந்த பூனை.

புத்திசாலியான அந்த பூனை நீங்க ரெண்டு பேரும் வெளியில வந்து இந்த பாறைக்கு பக்கத்துல உட்காருங்க உங்க பிரச்சினையை நான் தீர்த்து வைக்குறேனு சொல்லிச்சு

உடனே முயலும் எலியும் அங்க பூனை சொன்ன இடத்துல போய் உட்காந்துச்சிங்க

உண்மையாவே அந்த இடம் ரெண்டு பாறைகளுக்கு நடுவில இருந்துச்சு, அந்த இடத்துக்கு ஒரு பாதை மட்டுமே இருந்திச்சு.

அந்த பாதையிலயும் பூனை நின்னுகிட்டு இருந்திச்சு.

நல்லா இருந்த வீட்ட அசுத்தம்பண்ணினதுக்கு எலிக்கு தண்டனைனு சொல்லி அத பிடிச்சி தின்னுடுச்சு பூனை.

சின்ன விசயத்துக்கு தேவையில்லாம அடுத்தவங்க கிட்ட பஞ்சாயத்துக்கு போன முயலோட தப்புக்கு தண்டனைனு சொல்லி முயலையும் பிடிச்சி தின்னுடுச்சு.

தேவையில்லாம சண்ட போட்ட முயலும் எலியும் வீணா செத்துப்போச்சுங்க.

நீதி : ஊர் ரெண்டு பட்டாள் கூத்தாடிக்கு கொண் டாட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை சரியாக உணரும்பொழுது வீணான எண்ணங்கள் என்னும் விலங்கிலிருந்து விடுபட முடியும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்க வேண்டாமோ!

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றவர்களைக் கைது செய்கின்ற அதே வேகத்தில், போதைப்பொருளைப் பாவிப்பவர்களும் கைது செய்யப்படுகின்றனர்.

இங்கு ஒரு தரப்பு இளம் சமூகத்தைப் பாழாக்கும் வேலையில் ஈடுபடுகின்றது. அந்த ஈனர்களின் வலையில் சிக்குண்ட அப்பாவிகள் போதைக்கு அடிமையாகி அதிலிருந்து தங்களை மீட்டெடுக்க முடியாமல் வருந்துகின்றனர்.

ஆயினும் இரண்டும் ஒரே குற்றமாகக் கருதப்பட்டு, இரு வகையினரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது போதைப்பொருள் வியாபாரிகள் குறுக்கு வழியில் உச்ச இலாபம் உழைக்கும் நோக்கில், அப்பாவி மக்களைச் சீரழித்து கொல்லுகின்றனர்.

ஆக, இத்தகையவர்கள் கைது செய்யப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டியவர்கள்.

ஆனால் போதைப் பாவனைக்கு அடிமையானவர்கள் அறியாமையும் கூடா நட்பும் ஒரு முறை நுகர்ந்து பார்த்து விடலாமே என்ற தூண்டலும் அவர்களை போதைக்கு அடிமையாக்கி விடுகிறது.

அதேநேரம் நாட்டுக்குள் வருகின்ற போதைப் பொருளை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாகவே எங்கள் அருமந்த இளம் சமூகம் போதைக்கு அடிமையாகி தங்கள் வாழ்வைத் தொலைத்து விடுகின்ற பரிதாபத்துக்கு ஆளாகியுள்ளதென்ற உண்மை உணரப்பட வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் போதைக்கு அடிமையானவர்களுக்கு – போதைப்பொருள் பாவனையின் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கின்ற ஏற்பாடுகள் கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதிலும் குறிப்பாக, போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகின்ற இளைஞர்கள் வடபகுதியில் கணிசமாகவுள்ளனர் என்ற தகவல் நெஞ்சைப் பதறவைப்பதாகும்.

இவ்வாறு வடபுலத்தில் போதைக்கு அடிமையான இளைஞர்கள் இருக்கின்ற போதிலும் அவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கக்கூடிய ஏற்பாடுகள் எதுவும் நம் வடபகுதியில் இல்லை என்பது மிகவும் வேதனைக்குரியது.

தென்பகுதியைப் பொறுத்தவரை அவர்கள் போதைக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை மீளவும் சமூகத்தில் இணைத்து விடுகின்றனர்.

ஆனால் எங்கள் தமிழர் பிரதேசத்தில் புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்படாமையால், போதைக்கு அடிமையான நம் இளைஞர்கள் போதையின் கடும் தாக்கத்தால் திடீரென உயிரிழந்து போகின்றனர்.

இந்தக் கொடூரம் சம்பந்தப்பட்டவரை மட்டுமன்றி, அவர் சார்ந்த குடும்பத்தையும் உறவுகளையும் கடுமையாகப் பாதிக்கின்றது.

எனவே இதுவிடயத்தைக் கருத்தில் கொண்டு வடபகுதியில்; போதைக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் நிலையங்களை உடனடியாக ஆரம்பிக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# நாட்டை அபிவிருத்தி செய்ய மேலும் சட்டங்கள் கொண்டுவரப்படும்

## ஜனாதிபதி ரணில்

நாட்டை அபிவிருத்தி செய்ய மேலும் பல சட்டங்களை கொண்டு வர எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உரித்து (உருமய) திட்டத்தின் முதற்கட்டமாக 10,000 விவசாயிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது நாடு தற்போது படிப்படியாக மீண்டு வருகிறது. இந்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இன்னும் சிலர் கஷ்டப்படுகிறார்கள். எம்மால் முடிந்தளவு இந்த மக்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கினோம். அதற்காக அஸ்வெசும திட்டத்தை செயல்படுத்தினோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுத்தோம்.

வங்குரோத்து நிலையில் இருந்து இப்போது தான் மீண்டு வருகின்றோம். மூன்றாவது கட்டமாக இந்த நிரந்தர காணி உரிமைகளை மக்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு இந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்றால், நாட்டின் பொருளாதாரம் வலுப்பெற்றதன் பின்னர் எதிர்காலத்தில் என்ன செய்ய முடியாது என நான் கேட்க விரும்புகின்றேன்.

நாம் ஆரம்பித்த இந்தப் பயணத்தைத் தொடர்ந்தால், 2025 ஆம் ஆண்டில் 5% பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது.

நாட்டை மீட்டெடுக்க அனைவரும்ஒன்றிணைந்தோம். நாங்கள் அங்கு கட்சி அரசியலில் ஈடுபடவில்லை. அப்படி செயற்பட்டிருந்திருந்தால் இந்த வெற்றி கிடைத்திருக்காது. இந்தப் பணியை முன்னெடுப்பதில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நம்மைப் பற்றி நாம் சிந்திக்கக் கூடாது. நாட்டு மக்களின் எதிர்காலம் பற்றியே சிந்திக்க வேண்டும். நாட்டின் 20 இலட்சம் மக்களுக்கு நாம் அனைவரும் இணைந்து காணி உரிமையை வழங்கியுள்ளோம். மேலும் 20 இலட்சம் பேருக்கு அஸ்வெசும நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 15 இலட்சம் பேருக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சியடைந்து வருமான வழிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வளவு பாரிய பணியை பாராளுமன்றத்தில் ஒரு குழுவால் செய்ய முடியும் என்றால், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் என்ன செய்ய முடியாது என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும். நாம் அந்த வழியில் செல்ல வேண்டும்.

எதிர்காலத்தில் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய மேலும் பல சட்டங்களை கொண்டு வர எதிர்பார்க்கின்றோம். அனைவரும் இணைந்து முன்னேறுவோம். விவசாயத்தை நவீனமயமாக்குவதன் மூலம் நாட்டில் மிகப்பெரிய விவசாயப் புரட்சி ஏற்பட்டு வருகிறது என்றார். (ம-7)

# திருமலை சிறையில் கைதிகள் மோதல்

## ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை சிறைச்சாலையில் இரு கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை (06) உயிரிழந்துள்ளதாக திருகோணமலை துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை கிண்ணியா மஹ்ரூப் நகரைச் சேர்ந்த மொஹமட் அலி உவைஸ் முகம்மது உபயத்துல்லா என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி திருகோணமலை சிறைச்சாலையின் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதுடன், தலையில் காயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நபரே உயிரிழந்துள்ளார். (ம-7)

# போலி நாணயத்தாள்களுடன் கொழும்பில் ஒருவர் கைது

போலி நாணயத்தாள்களை தம்வசம் வைத்திருந்த ஒருவர் கொழும்பு மொரட்டுவை- எகொட உயன பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 30 நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 37 வயதுடைய முச்சக்கரவண்டி சாரதியென தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மொல்லிகொடவில் உள்ள சந்தேகநபரின் வீட்டை சோதனையிட்ட பொலிஸார் குறித்த வீட்டில் இருந்த ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள், ஒரு பகுதி அச்சிடப்பட்ட ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் மற்றும் அவற்றை அச்சிட பயன்படுத்தப்பட்ட அச்சு இயந்திரங்கள் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர்.

விசாரணையின் போது பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாறு போலி நோட்டுக்களை அச்சிட்டதாக சந்தேக நபர் தெரிவித்துள்ளார். (ம-7)

### குறைந்த வருமானம் பெறும்

# 50 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளின் உரித்துரிமை

(கொழும்பு)

மாடி வீடுகளில் குடியிருக்கும் குறைந்த வருமானம் பெறும் 50 ஆயிரம் குடும்பங்களுக்கு வாடகை அறவிடுவதை இடைநிறுத்தி, அந்த வீடுகளின் உரித்துரிமையை அவர்களுக்கே வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள மாடி வீடுகளுக்கு, அந்த கட்டணம் அறவிடப்படுவதை இடைநிறுத்தி, அதற்கான உரிமையை அவர்களுக்கே வழங்க 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.


இதற்கமைய, நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றினால் வழங்கப்பட்டுள்ள வீடுகள் அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று **புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** முகாமைத்துவபீடம்-கலாசாலை வீதி, பால்பண்ணை-கலாசாலை வீதி (திருநெல்வேலி), ஞானபாஸ்கரோதயாவீதி, பால் பண்ணைசந்தி இராஜ வீதி நீர்வழங்கல் சபை-நெடுந்தீவு, சென் அந்தோனியார் தேவாலயம்-நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், மகாறம்பைக்குளம் (தாஸ்நகர்), மகாறம்பைக்குளம் பிள்ளையார் வீதியடி ஆகிய இடங்களிலும் **நாளை வியாழக்கிழமை** காலை 9.00 மணியிலிருந்து 5.00 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** மத்தோனி விக்னேஸ்வரா-கரவெட்டி **வவுனியா பிரதேசத்தில்** பகல, அளுத்வத்த, துகம, RDW கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினைச் சித்தர் முத்துக்குமார சுவாமிகளின் 75 ஆவது குருபூசை தினம் இன்று



1897 ஆம் ஆண்டில் நயினாதீவில் ஆறுமுகம்-பார்வதி தம்பதிகளிற்கு திருவருளும் குருவருளும் கைகூடி வர ஆறாவது பிள்ளையாக அவதரித்து "முத்துக்குமார்" எனும் பிள்ளைப்பெயர் கொண்டவரே பிற்காலத்தில் ஈழத்துச் சித்தர் வரிசையில் வைத்துப் போற்றப்படும் "நயினைச் சித்தர் தவத்திரு முத்துக்குமார சுவாமிகள்" ஆவார்.

இவர் தனது இளமைக்கல்வியை நயினாதீவு தில்லையம்பல வித்தியாசாலையில் பெற்றுக்கொண்டதுடன் வாலிப வயதில் ஏனையவர்களைப் போலவே தொழில் நிமித்தமாக கொழும்பு சென்றார். அங்கு தன் தமையனாரின் வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்து வந்தார். இதன்போது 1915 ஆம் ஆண்டு ஏற்பட்ட சிங்கள -முஸ்லிம் கலவரத்தினை கண்ணெதிரே கண்டு மனிதப்பிறவியின் நிலையாமையை உணர்ந்தார். மனிதப் பிறப்பின் நோக்கத்தை அறிய நாட்டமுற்றார். இவருக்கு இந்தியாவிலிருந்து வந்து கொழும்பில் தங்கிச்செல்லும் இந்திய சந்நியாசிகள் வழிகாட்டியாயினர். அக்காலத்தில் கொழும்பு முகத்துவார பகுதியில் வசித்த "ஆனைக்குட்டி சுவாமிகளும்" இவரது ஆத்மீக தேடலுக்கு விடையானார். இவ்வாறே இந்திய கடப்பையூர் சுவாமிகள் ஒருவருக்கு முத்துக்குமார் அடியவராகி அவருடனே கதிர்காம யாத்திரை சென்றபோது வழியில் அவரிடம் தீட்சையும் பெற்றுக் கொண்டார். ஆனால் இதன்பின்பு அச்சுவாமிகள் எவரும் அறியாது சென்றுவிடவே தாயை தொலைத்த கன்று போல் ஏங்கினார் முத்துக்குமார். அவரைத்தேடி எங்கும் காணாது ஈற்றில் கைத்துண்டு கவிதையை வைத்து விட்டு காணாமற் போனார் முத்துக்குமார்.

1933 ஆம் ஆண்டில் நடைபெற்ற நயினை அம்பாளின் வருடாந்த மஹோற்சவத்தில் நீண்ட சடையும் காவி உடையுமாக தோன்றிய சுவாமிகளை தம் ஊரார், சுற்றத்தார் இன்னாரென கண்டு கொள்ள நீண்ட நாட்களாகியன. இருப்பினும் உறவுகள் வருந்தி அழைத்தும் எவரிடமும் அண்டாது உறவெல்லாம் துறந்து துறவியாராக அங்குள்ள ஆலயங்களிலும் மடங்களிலும் தங்கி வந்ததுடன் பின்னாளில் தமது யாழ்ப்பாண அன்பர்களில் ஒருவரது சிவலிங்கப் புளியடி இல்லத்தில் தங்கிச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டார்.

தனது தலயாத்திரைகளின் போது மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரம், கும்பிளா வளை பிள்ளையார் கோவில், திக்கம் கந்தவனம் சுப்பிரமணியர் கோவில், வண்ணார்பண்ணைச் சிவன் கோவில், காட்டுத்துறை அம்பலவாணப் பிள்ளையார், காட்டுத்துறை மகாமாரி அம்மன் கோவில், நல்லூர் முருகன் மற்றும் நயினைப்பதி கோவில்கள் தோறும் சென்று வழிபட்டு அக்கோவில் மூல மூர்த்திகள் மீது அன்பு ததும்பும் பாசுரங்களைப் பாடியுள்ளார். மேலும் நயினை அம்பாளின் மீது கொண்ட தீராக் காதலால் நாகேஸ்வரி தோத்திர மாலை, நாக பூசணி அந்தாதி என்பனவும் சிவனின் பெருமை கூறும் நமச்சிவாய மாலை, சைவசித்தாந்த விளக்கமாக உண்மை அறிவிளக்கம் என்பவற்றையும் பாடியருளியுள்ளார்.

இந்நாட்களில் சுவாமிகளின் பெருமை யாழ்ப்பாணத்தவர்களால் உணரப்பட்டு அவரைச்சுற்றி மெய்யன்பர்களின் கூட்டம் பெருகியது. அன்பர்கள் வேண்டி அழைத்த போது அவர்தம் இல்லமேகி தன்னுடன் கூடவே வைத்திருக்கும் இறைவிக்கிரகங்களை பூக்களால் அர்ச்சித்து அவ்வூரவர்களையும் அழைத்து பூசை வழிபாடாற்றி வேண்டும் அடியவரின் உடற்பிணி, மனக்குறை நீக்கி வேண்டியன கிடைக்கப் பெற்று அவர்களை இறை சிந்தனையின்பால் நிலைபெறச் செய்தார்.

அமுதசுரபியாம் நயினாதீவு அம்மனின் வருடாந்த மஹோற்சவத்தை நாடிவரும் பக்தர்களின் பசிக்களை நீக்கி அம்பாளை தரிசிக்க வேண்டி அன்னதான திருப்பணிக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் யாழ்ப்பாண அன்பர்கள் மூலமாக உற்சவ காலத்திற்கு முன்பே சேகரித்து ஊருக்கு அனுப்பி அன்னதான கைங்கரியத்தை முன்னின்று நடத்தினார். இன்றும் அங்கு தினமும் நடைபெறும் அமுதசுரபி அன்னதான சபையின் நிகழ்விற்கு அடித்தளமிட்டவர் எமது முத்துக்குமார சுவாமிகளே ஆவார்.

ஒருநாள் சுவாமிகள் வண்ணார் பண்ணையில் தங்கியிருந்த காலத் தில் காங்கேசன்துறை வீதியால் நடந்து வந்து கொண்டிருந்தபோது சிவதொண்டன் நிலையத்தில் இருந்து தனது சிஷ்யரான செல்லத்துரை சுவாமிகளுடன் வெளிப்பட்ட யோகர் சுவாமிகள் எதிரே வருவது முத்துக்குமார சுவாமிகள் என்பதை கண்டதும் "பெரியவர் வருகிறார். நாங்கள் சற்று வழிவிட்டு ஒதுங்கி நிற்போம்" என தமக்கு கூறியதுடன், இருவரும் ஓரமாக நின்றதாக செல்லத்துரை சுவாமிகளே பிற்காலத்தில் தனது அன்பர் ஒருவருக்கு கூறியுள்ளார்.

இவ்வாறு சமகால ஞானிகளால் மதிக்கப்பட்ட பெருமைக்குரிய முத்துக்குமார சுவாமிகள் அக்கால ஏனைய ஆன்மீகத் தலைவர்களுடன் ஆத்மீகத் தொடர்புகளையும் பேணியுள்ளார்.

சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டவர்களில் முதன்மையானவர் யாழ்ப்பாணம் அறிந்த "குடையிற் சுவாமிகள்" ஆவார். இவர் 1936 ஆம் ஆண்டு கந்தையா எனும் நாமத்துடன் இளைஞராக இருந்த போது வடிவேற்சுவாமிகளுடன் நயினாதீவு சென்று அங்கு சுவாமிகளால் அமைக்கப்பட்ட கங்காதரணி திருக்குளத்தில் நீராடி முத்துச்சுவாமிகளின் பாதம் பணிந்து எனக்கும் வழிகாட்ட வேண்டும் எனவேண்டி நின்றார். இவ்வாறு அருளாசி பெற்ற கந்தையாவே பின்னாளில் பார் போற்றும் குடைச்சுவாமிகள் ஆனார். சுவாமிகளிடம் கொழும்பில் இருந்து வந்து நயினாதீவில் அருளாசி பெற்ற இராமச்சந்திரா எனும் இளைஞரே சுவாமிகளால் இந்தியாவில் ரமண மகரிஷியிடம் சிஷ்யராக அனுப்பப் பெற்றதுடன் இவரே பின்னாளில் கொழும்பு இல்லறஞானி இராமச் சந்திரா சுவாமிகள் எனப்பெயர் பெற்றார். முத்துச்சுவாமிகளிடத்தில் அளவற்ற அன்புகொண்டு அவர் இருக்குமிடமெல்லாம் தேடிச் சென்று தரிசித்ததாக 1958 இல் வெளிவந்த ஆத்மஜோதி விசேடமலரில் ஈழத்துச் சித்தர்கள் எனும் நூலில் சிறப்பித்துள்ளார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்.

இவ்வாறு இந்தியாவின் திருவண்ணாமலையில் ரமண மகரிஷியுடன் தங்கி தன்னை புடம்போட்ட பொன்னாக மெருகேற்றி மீண்டும் தாய்நாடு வந்து தனது பிறப்பிடத்திற்கும் சைவம் தழைக்கும் யாழ். மண்ணிற்கும் சைவ நெறி ஓங்க அரும்பணியாற்றி வாழ்ந்த சுவாமிகள் 1948 ஆம் ஆண்டில் நயினைத் தாயின் மஹோற்சவம் முடித்து யாழ். வந்து வண்ணார்பண்ணையில் தன் அன்பர் கந்தப்பசேகரர் வீட்டில் தங்கியிருக்கும் போது அழிய வேண்டிய தன்னுடலை அழிக்க நோயை வரவழைத்துக் கொண்டார். நோயைப் பாராது சிவசிந்தனையில் திளைத்திருந்த போது தமது அன்பர்களின் நிர்ப்பந்தத்தால் மருத்துவத்தை ஏற்றாலும் தான் சமாதியுறும் காலம், சமாதி வைக்கும் இடம், வைக்கும் முறை, அதற்கு பொறுப்பானவர் என்பவற்றை முற்கூட்டியே தெரியப்படுத்தி அதன் படியே 1949 ஆம் ஆண்டு தை மாதம்26 ஆம் திகதி பிரதோச காலமும் பூராட நட்சத்திரமும் கூடிய நள்ளிரவுப் பொழுதில் அடியவர்கள் பார்த்திருக்க பத்மாசனமிட்டு நிஷ்டையில் இருந்தவாறே சிவஜோதியுடன் இரண்டறக் கலந்து பரிபூரணமடைந்தார்.

சுவாமிகளின் ஸ்தூல சரீரம் நயினாதீவு காட்டுகந்தசுவாமி கோவிலின் பின்புறமாக சமாதி வைக்கப்பட்டு அதன் மேல் சுவாமிகளால் பூசிக்கப் பெற்று வந்த சிவ- பார்வதி விக்கிரகங்களுடன் முருகன் சிலையும் சேர்க்கப்பட்டு சோமஸ்கந்த ஈஸ்வரம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் அருகில் சுவாமிகளின் அடியவர் கரம்பன் தம்பையாவினால் 1957 ஆம் ஆண்டு அருள் ஒளி நிலையம் எனும் மடமும் கட்டப்பட்டு இந்திய பலப்பை சித்திரமுத்து அடிகளால் திறந்து வைக்கப்பட்டது.

இன்று நயினைச்சித்தர் பரிபூரணமடைந்த 75 ஆம் ஆண்டு நிறைவு குருபூசைத்தினம். சுவாமிகளது சமாதி ஆலயத்தில் சிறப்புற நடைபெறுகின்றது. இதன் பொருட்டு அவரது வரலாறு மற்றும் அவரால் பாடப்பெற்ற பதிகங்கள் அடங்கிய "நயினை ஞானமுத்து" மலர் வெளியிடப்படுவதுடன் அப்பாடல்களை இசையுடன் கூடிய "முத்துக்குமார நாதம்" இறுவட்டாகவும் வெளியிடப் படவுள்ளது.

**வ.குலத்துங்கன்,**
**அருள் ஒலி நிலைய**
**தெண்டர் சபை,**

## 1300 வைத்தியர்களுக்கு அடுத்த மாதம் நியமனம்

### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

நாட்டின் அரச வைத்தியசாலைகளில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறைக்கு தீர்வாக எதிர்வரும் மார்ச் மாதம் மேலும் 1300 வைத்தியர்கள் நியமிக்கப் படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த வைத்தியர்கள் பயிற்சியை முடித்ததும் நியமனம் வழங்கப்படும் என சுகாதார செயலாளர் விசேட வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வாரம் பயிற்சிகளை நிறைவு செய்த 90 மருத்துவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், எதிர்காலத்தில் வைத்தியர்களின் பற்றாக்குறைக்கு தீர்வு காணப் படும் என குறிப்பிட்டார். (நி-5-6)

## தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை சந்திக்கின்றார் இந்திய பிரதமர்

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

சிவஞானம் சிறீதரன் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளை இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



புதுடில்லியில் இன்னும் சில வாரங்களில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது என்றும் மேற்படி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

## உத்தியோகபூர்வ ஆடைகளை புறக்கணித்த தாதியர்கள்

(கொழும்பு)

சாதாரண ஆடைகளை அணிந்து பணிக்கு சமுகமளிக்கத் தீர்மானித்துள்ளதாக அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததைக் கண்டித்து, அவர்கள் தமது உத்தியோகபூர்வ சீருடையை அணிய மறுத்துள்ளார்கள். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவிசாவளை...

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## வாகனங்கள்...

வித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும்கருத்துத்தெரிவிக்கையில், தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடியின் கீழ், இறக்குமதி கட்டுப்பாடுகள் மிகவும் திட்டமிடப்பட்ட மற்றும் நுட்பமான முறையில் தளர்த்தப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், சில காலத்திற்கு மோட்டார் வாகனங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்ய முடியாது என நான் நம்புகின்றேன் எனக் குறிப்பிட்டார். (ம-7)

## இந்திய...

முக்கிய காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்திய எதிர்ப்புக் கொள்கையை கடந்தகாலங்களில் பின்பற்றிய ஜே.வி.பியின் இந்திய விஜயமானது கேள்விகளை தோற்றுவித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், "ஜே.வி.பியின் இந்திய விரோத கொள்கைகளின் விளைவாக நாடு எதிர்கொண்ட இழப்பிற்கு சம்பூர் மின் திட்டம் ஒரு உதாரணமாகும்.

எனினும், ஜே.வி.பி. இப்போது வேறு ஒரு பார்வையை அடைந்து, இந்தியாவுக்கான சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டுள்ளது.

இது ஒரு நல்ல விடயம். அநுர தரப்பின் இந்திய விஜயத்தை தொடர்ந்து, இலங்கைக்கு வரும் முதலீட்டாளர்களுக்கு அந்தக் கட்சி ஆதரவளிக்கும் என நம்புகிறேன்" என்றார்.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி குழுவினர் ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியாவை சென்றடைந்துள்ளனர்.

இவ்வாறு தூதுக்குழுவினர் புது டெல்லி, அகமதாபாத் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய மூன்று நகரங்களுக்குச் செல்லவும், விவசாயம் மற்றும் தொழில்துறையில் சிறந்து விளங்கும் மையங்களைப் பார்வையிடுவதோடு, அரசாங்க அதிகாரிகள் மற்றும் வணிக சமூகத்தின் உறுப்பினர்களுடனும் சந்திப்புகளை நடத்தவும் உள்ளனர்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உட்பட பல உயர்மட்ட இந்திய அதிகாரிகளை சந்தித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அமைச்சுப்...

ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

மேலும் அவரது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல, தனது பதவி விலகல் கடிதத்தை நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதியளித்த குற்றச்சாட்டில் கெஹலிய ரம்புக்வெல கடந்த 2ஆம் திகதி கைது செய்யப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் அவர் கைது செய்யப்பட்ட அன்றைய தினமே வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டதுடன், அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(ம-7)

## யுக்திய...

தாக பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 49,558 சந்தேகநபர்களும் குற்றப்பிரிவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 6,983 சந்தேகநபர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

இந்த சுற்றிவளைப்புகளின்போது 142 கிலோ 541 கிராம் ஹெரோயின், 208 கிலோ 290 கிராம் ஐஸ், 974 கிலோ 605 கிராம் கொக்கெய்ன் ஆகிய போதைப் பொருட்கள் பாதுகாப்பு தரப்பினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 1817 பேர் தடுத்து வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான 1,981 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-7)

## தென்னைகளைத்...

தாக்கம் பளைப் பகுதியிலும் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் வெள்ளை ஈ தொற்று கடுமையாகப் பரவிய போதிலும் அதைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள் வெற்றியளித்திருந்தன.

எனினும் தற்போதைய கால நிலைமாற்றங்களினால் மீண்டும் வெள்ளை ஈக்கள் தென்னைகளைக் கடுமையாகப் பாதிப்பதாகவும் இதனைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## இணைய...

யொன்றில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைவாக, அரசியலமைப்புடன் பொருந்தும் வகையில், சட்டமூலத்தினைச் சமர்ப்பித்த தரப்பினால் திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

இணையவழி சட்டமூலம்தொடர்பில் கடந்த ஜனவரி 24ஆம் திகதி குழுநிலையில் திருத்தங்கள் சபாநாயகரால் அறிவிக்கப்பட்டன.

இதன்போது, சட்டமா அதிபரின் சார்பில் மேலதிக மன்றாடியார் நாயகம், பாராளுமன்றத்தில் பிரசன்னமாகியிருந்ததுடன் உயர்நீதிமன்றின் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் குழு நிலையின் போது உள்ளடக்கப்பட்டுள்ளதாக [illegible] அறிவித்தார்.

இந்த நிலையில், இணையவழி சட்டமூலம் மூன்றாம் மதிப்பீட்டின் பின்னர் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் வழிகாட்டப்பட்டவாறாக, இந்தத் திருத்தங்கள் அரசியலமைப்புடன் பொருந்துகின்றன எனவும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் சான்றளிக்கப்பட்டது.

இதன் பிரகாரம், கடந்த 2ஆம் திகதி நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் சபாநாயகரினால் சான்றுரைப்படுத்தப்பட்டிருந்தது.

எனவே, சட்டமா திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டவாறாக, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம், இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தனக்கு ஏற்றவாறு சட்டத்தை திருத்துவதற்கு சபாநாயகருக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என சபாநாயகர் அலுவலகம் குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.06
சீட்டிழுப்பு இலக்கம் 0208
U 9 2 0 6 6 3 U

தன நிதானய
திகதி - 2024.02.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1412
W 28 40 51 55 W
03724

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3624
சீட்டிழுப்பு திகதி 06.02.2024
Y 20 37 69 80
Y 93562

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.06
சீட்டிழுப்பு இலக்கம் 0691
கன்னி 20 35 50 54 கன்னி
20184 06

மஹஜன சம்பத
திகதி 2024/02/06
சீட்டிழுப்பு இலக்கம் 5382
R 8 6 3 9 6 0

மெகா பவர்
திகதி 06/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1730
V 13 19 29 35 66
68019

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.02.2024 வெற்றி வாரம் 090 வர்ணம் சிவப்பு
O 5 6 8 1 4 2
98137
28,452,128.00
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2356 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.06 தினம் செவ்வாய்க்கிழமை
12 38 52 68 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,139,868/-
62512

சனிதா
திகதி 2024.02.06 வெற்றி வாரம் 4517
38 41 48 60 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,423,305.60
96521

சசிரி SASIRI
வெற்றி வாரம் 438
சீட்டிழுப்பு திகதி 2024.02.06
வெற்றி இலக்கங்கள் 15 17 39
05
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,863,400/-

சீட்டிழுப்பு வாரம் 4068 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.06 தினம் செவ்வாய்க்கிழமை
08 37 42 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,887,253.20
861290

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 27 04 39 57 60
1532
06.02.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 502,739,646.20

ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2182
சீட்டிழுப்பு திகதி : 2024.02.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,206,572.80
03 09 22 28 D
171134


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பலநோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவர் மீது

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எதுவித அறிவித்தலும் இன்றி இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

உரிய முறைப்படி அவர் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளாததன் காரணமாக யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயங்கு நிலையில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்க விதிமுறைகளுக்கு அமைய செயற்படாத தலைவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்ப்பாணப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவர் மற்றும் இயக்குனர் சபை உறுப்பினர்கள் சிலரும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7)

## எரிபொருளு...

தப்பட்டதால் இன்று எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களால் நேற்று தேவையான எரிபொருள் ஓடரை (கட்டளை) குறித்த கால அவகாசத்துக்குள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காலை பத்து மணிக்கு முன் தேவையான ஓடர்களை செய்ய அனைவராலும் முடியாதுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதன் காரணமாக ஏற்படும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தமது சங்கமும் எரிபொருள் நிரப்பு நிலையங்களும் பொறுப்பல்ல எனவும் விநியோகஸ்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-7)

## 2024 பொதுத்...

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய செலவினங்களுக்கான நிதியானது, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ளது.

அதில் தேர்தலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 10 பில்லியன் ரூபாயைக் கொண்டே முகாமைத்துவம் செய்ய வேண்டியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவை விசேட கவனம் செலுத்தியுள்ளது. ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் அமைச்சரவை இந்த விடயத்திற்கு இணங்கியுள்ளது.

அரசாங்கத்திடம் காணப்படும் வரையறுக்கப்பட்ட நிதி நிலைமையினால், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை தற்போது நடத்த முடியாத சூழல் காணப்படுகின்றது.

எனவே இந்த மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குத் தேவையான நிதியை 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தினூடாக வழங்க வேண்டும். இது தொடர்பாகவும் அமைச்சரவையில் ஆராயப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அந்த 2 தேர்தல்களையும் நடத்துவதற்கு முன்னதாக விசாரணை ஆணைக் குழுவினால் சில பரிந்துரைகள் முன்வைக்கப்படவுள்ளன.

தேவைப்படும் பட்சத்தில் அந்த பரிந்துரைகளுக்கு அமைய தேர்தல் சட்டங்களை மறுசீரமைப்பதற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

இதனை நாம் பாராளுமன்றத்தின் அனுமதியின் ஊடாகவே அறிமுகம் செய்யவேண்டும்.

இது தொடர்பாகவும் அமைச்சரவையில் நாம் கலந்தாலோசித்துள்ளோம்" என அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18890)

076 825 7716 (ஆகாஸ்)



உ
சிவமயம்



கோண்டாவில் கிழக்கு
திருவருள்மிகு
ஸ்ரீ செல்வபால நர்த்தன விநாயகர் ஏனைய
பரிவார மூர்த்திகளுக்கும்

பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
மஹா கும்பாபிஷேகம்
07.02.2024 புதன்கிழமை
காலை 7.00 மணி தொடக்கம் 8.40 மணி வரை

கும்பாபிஷேக குருமார் விபரம்

சர்வசாதகர், சர்வபோதகர்
பிரம்மஸ்ரீ
மகாதேவ சிறீவத்சங்க குரு

மஹா கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு
பிரம்மஸ்ரீ
ச.சிறீஸ்கந்தராஜாக்குருக்கள்
(அகில இலங்கை சமாதான நீதவான்)

பிரதம சிவாச்சாரியார்
தலைமையில்
பல சிவாச்சாரியார்கள்
பங்குபெறுவர்.

கோயில் ஐயா
இ.லோகேஸ்வர ஐயா

முகூர்த்த நிர்ணயம்
ஸ்ரீ ஐயா (கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
07.02.2024
இங்ஙனம்
ஆலய தர்மகர்த்தா.

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

(C-8289)



**உடனடி வேலை வாய்ப்பு**

W.E.C நிறுவனமானது தனது கிளை நிறுவனங்களுக்காக ஆட்சேர்ப்பு பணியை ஆரம்பித்துள்ளது. இம்முறை தரம் 10,11, A/L மாணவர்களும் மற்றும் இம்முறை பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். வயது எல்லை 18 - 35 தகுதிகான் காலத்தின் பின்னர் நிரந்தர வேலை. அடிப்படை சம்பளம், ETF, EPF வசதிகள் பெற்றுக் கொள்ளப்படும். தகுதிகான் காலத்தின் போது 29,500 - 48,700 வருமானம் வழங்கப்படும். (18920)

077 202 5118 | 074 143 3505



**பணிப்பெண் தேவை**

புலோலி தெற்கு பகுதியில் தனித்து வாழும் வயோதிப பெண்மணிக்கு சமையல் மற்றும் வீட்டு வேலைகள் தங்கிநின்று பார்க்கக்கூடிய 50 வயதுக்குட்பட்ட பெண் பணியாளர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (C-8293)

077 717 8486



**தேவை**



பளைப் பிரதேசத்தில் வேலை செய்வதற்கு மினி ஜே.சி.பி. வாடகைக்குத் தேவை.
தொடர்பு
075 719 0110



**விற்பனைக்கு**

புதிதாக திருத்தியமைக்கப்பட்ட நீல நிற CD-200 மோட்டார் பைக் (82 sri தொடர் இல) மற்றும் S20 E samsung phone உம் விற்பனைக்குண்டு. (18906)

077 545 6420
077 548 8044



**V2 VISA SERVICES**
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8295)



**வீடுகள், காணிகள் வியாபார நிலையங்கள் வாங்க வேண்டுமா? அல்லது விற்க வேண்டுமா? எம்மை நாடுங்கள்!**

எங்களிடம் யாழ்ப்பாணம், நல்லூர், கோண்டாவில், சுன்னாகம், உரும்பிராய், கொக்குவில், வட்டுக்கோட்டை, நீராவியடி ஆகிய பிரதேசங்களில் வீடுகள், காணிகள் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்புகொள்ளத் தேவையில்லை.
"உண்மையில் வாங்க விரும்புபவர்கள் மட்டுமே" தொடர்புகொள்ளவும்

**Easy Real Estate**

076 742 4301, 075 742 1612 (18912)



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடியில்
8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
A9 வீதி கைதடி சந்திக்கு அருகாமை

- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
- வட மாகாண சபை 300 மீற்றர்
- கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

தொடர்புகளுக்கு
071 173 3911
076 853 5022
(18919)



**உடனடி வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு கீழ்வரும் பணியாட்கள் தேவை.

- முகாமையாளர் - ஆண்/பெண்
- கணக்குப் பதிவாளர் - ஆண்/பெண்

- பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு : 077 743 5265

கரடிப்போக்கு சந்தியிலிருந்து 10Km சுற்றளவில் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். (C-8294)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org